விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 22 வெள்ளிக்கிழமை (07.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## புதிய அமெரிக்கத் தூதுவர் இன்று கொழும்பு வருகை



இலங்கை-மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான புதிய அமெரிக்க தூதுவர் மைக்கேல் சிசன் இன்று கொழும்பு வருவார் என்று அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் அவர் இலங்கையர்களுக்கு தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் வகையிலான காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதில் இலங்கையுடன் உறவினை வளர்த்துக் கொள்ளும் வழிமுறைகள் குறித்து ஆராயவிருப்பதாகவும் குறிப்பாக; வர்த்தக, பொருளாதார, சுற்றுலா வாய்ப்புக்கள் குறித்து (20ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் பகுதியில் 4 புதிய படை முகாம்கள்

### படையினர் முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 புதிய படை முகாம்களை அமைப்பதற்கான முயற்சியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் படை முகாம்களை அமைப்பதற்கான காணிகளைத் தருமாறு கோரி பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

படைத் தரப்பினர் கோரியுள்ள காணிகள் அரச காணிகள் எனவும் பொதுமக்கள் ஆட்சேபத்தைப் பொறுத்தே பாதுகாப்புத் தரப்பினருக்கு அந்தக் காணிகளைக் கொடுப்பதா? இல்லையா? எனத் தீர்மானிக்கப்படும் என்று பிரதேச செயலர் மா.பிரதீபன் தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தக் கூட்டத்தின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்தக் (19ஆம் பக்கம் பார்க்க)

# நாளை கிழக்குத் தேர்தல்; வன்முறை மூளும் அபாயம்

## கபே எச்சரிக்கை

**கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் அன்றைய தினம் கிழக்கு மாகாணத்தில் வன்முறைகள் வெடிக்கக்கூடுமென கபே எனப்படும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

குறிப்பாக கிழக்கின் அம்பாறை மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான அதிக சாத்தியங்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அரசு உரிய நட வடிக்கை எடுக்க வேண்டுமென கபே கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் வன்முறைகள் இடம்பெற்றால் அதில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அதிகம் பாதிப்படைய நேரிடும் எனவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் அக்கரைப்பற்று மற்றுமொரு கொலன்னாவ பிரதேசமாக மாற்றமடையக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் எச்சரிக்கைகளை சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் தரப்பினர் உதாசீனம் செய்த காரணத்தினாலேயே கொலன்னாவ பிரதேசத்தில் துரதிர்ஷ்டவசமான சம்பவம் இடம்பெற்றதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்றிலும் இதே நிலைமை நீடித்து வருவதாகவும் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசிமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-1)

## வேட்பாளர் வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு

கிழக்கு மாகாண சபை தேர்தலில் திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை வேட்பாளர் எம்.ஏ.எம்.மஹ்றூபின் வீட்டிற்கு இனந்தெரியாதோரால் கைக் குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கிண்ணியாவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீசப்பட்ட இக் கைக்குண்டு வீட்டிற்கு முன்னால் உள்ள மரமொன்றில் பட்டு கீழே விழுந்து வெடித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்தில் முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

செம்மணி நாயன்மார்கட்டு சந்தியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் ஒருவர் மரணமாகியுள்ளார்.

வீதியால் சென்றுகொண்டிருந்த முதியவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இக் கோர விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க அமெ.- இந்தியா இணைய வேண்டும்

### மேனன் தெரிவித்தாராம்-விக்கிலீக்ஸ்

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயற்பட வேண்டுமென வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார் என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

புதுடில்லிக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை மனிதாபிமான விவகாரங்களில் ஆர்வம் காட்டும் தரப்பினருடனும், ஐக்கிய நாடுகள் அமைப்புடனும் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து செயற்பட வேண்டும்.

வடக்குத் தமிழர்களுக்கான நியாயமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் விவகாரத்தில் இந்தியாவும்,அமெரிக்காவும் இணைந்து செயற்பட வேண்டும்.

தமிழர்கள் மனிதாபிமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகம் சில தர நிர்ணயங்களை விதிக்க வேண்டும்.

யுத்தத்தை (19ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆஸி பயணம்; நேற்றும் 54 பேர் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகப் பயணித்ததாகக் கூறப்படும் மேலும் 54 பேர் மிரிஸ்ஸ கடற்பரப்புக்கு அப்பால் இலங்கை கடற்படையினரால் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஸ்ஸவில் இருந்து 6 கடல்மைல்களுக்கு அப்பால் இவர்கள் கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு மேலதிக விசாரணைக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத பயணத்தை மேற்கொண்டதாகக் கூறப்படும் ஆயிரத்து 643 பேர் இந்த வருடத்தில் கைது செய்யப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக வேறு படகுகள் மூலம் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட 62 பேரை தலா ஒவ்வொருவரையும் 5 இலட்சம் ரூபாய் சரீர பிணையில் செல்வதற்கு நீர்கொழும்பு பிரதான நீதிவான் ஏ.எம்.என்.பி.அமரசிங்க நேற்று அனுமதியளித்துள்ளார்.

அத்துடன் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் யுத்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில்

ஜப்பானிய கடற்பிராந்திய பாதுகாப்புப் பிரிவின் இரு யுத்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்த இரு யுத்தக் கப்பல்களும் நல்லெண்ண விஜயமாக வருகை தந்தபோது இலங்கைக் கடற்படையினர் அவற்றினைச் சம்பிரதாயபூர்வமமாக வரவேற்றனர்.

ஜப்பானிய கடற் பிராந்திய பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த் உரகா 460 மற்றும் ஹஜ்ஜியோ 302 ஆகிய யுத்தக் கப்பல்களே வருகை தந்துள்ளன என (20ஆம் பக்கம் பார்க்க)

## 7 வருடம் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு உடனடியாக இடமாற்றம்

### யாழ்.கல்விப் பணிப்பாளர் செல்வராஜா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குள் இடமாற்றம் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தெரிவித்தார்.

எதிர்வரும் 14-ம்திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இதில் க.பொ.த உயர்தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் தரம் 5இல் கற்பிக்கும் ஆசிரியர்களும் உள்ளடக்கப்படுவர் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ந)

## இவர்களை நாங்கள் இப்படி நடத்தலாமா?

(கரவெட்டி)

முன்னாள் போராளிகளை சமூகத்தில் இருந்து ஒதுக்கும் சம்பவங்கள் வடக்கில் அதிகரித்துள்ளதாக போராளிகளின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த காலப்பகுதியில்அப்போராளிகளுக்கு சமூகத்தால் அதிகளவான மரியாதையும் கௌரவமும் வழங்கப்பட்டது.

ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்த பின் அதிகளவான (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ பரா +
சித்த ஆயுர்வேத வைத்தியம்

அ. இரகுபதி R.A.M.P
பதிவு இல:7105
தொ.பே: 0777524090
37/01, சிவநகர்,
உருத்திரபுரம்.

முட்டு, சளி, காய்ச்சல், வயிற்றோட்டம், சலரோகம், செங்கமாரி, கடி, சொறி, வாதம், அல்சர், வாய்வு, நோவு, இளநரை முதலான அனைத்து ரோகங்களுக்கும் சிகிச்சை பெறலாம்.

- குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணெய்
- பீனிச எண்ணெய்
- கூந்தல் வளர் எண்ணெய் முதலானவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

(C-971)


# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தின் லண்டனின் வாழ்க்கையும் கல்வியும் எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதம பேச்சாளராக லண்டன் இம்பேரியல் கல்லூரியின் உள்நாட்டு மற்றும் சுற்றுப்புற சூழல் பொறியியல் துறை 4ஆம் வருட இளங்கலை மாணவன் சரவணபவன் தீபன் கலந்து கொள்வார். (ந-9)

# கலச பூசையும் தீட்சை வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை ஸ்ரீ அம்மா பகவான் கலச பூசையும் முக்தி தீட்சை வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அண்மையில் இந்தியா வரதபாளையம் சென்று ஸ்ரீ கல்கி பகவானின் நேரடி முக்தி தீட்சை தரிசனம் பெற்றுக் கொண்ட அடியார்களினால் பக்தர்களுக்கு முக்தி தீட்சை வழங்கப்படவுள்ளதாக ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கம் அறிவித்துள்ளது. (ந-9)

# வீதி விபத்து இருவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி கலிகை சந்தியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவத்தில் கரவெட்டி துன்னாலை தெற்கைச் சேர்ந்த அருந்தவராசா குணேசன் (வயது 20), புலோலி தெற்கை சேர்ந்த ரவீந்திரன் பத்மரூபன் (வயது 16) என்ற இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்ட வருகின்றனர். (ந-24)

## மரண அறிவித்தல்

### திருமதி குணரெத்தினம் கமலாவதி

(பார் குணத்தாரின் மனைவி)



கந்தரோடை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் டி 6, கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்ட குணீரெத்தினம் கமலாவதி (பார்க் குணத்தாரின் மனைவி) 2012.09.06 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் குணரெத்தினம் (முன்னாள் பார் உரிமையாளர்) அவரது அன்பு மனைவியும், சாந்தகுமார் (ஜேர்மனி), சுரேந்திரகுமார் (லண்டன்), கணேசகுமார் (கனடா), பிரசன்னகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராஜநாதன் (அமெரிக்கா), காலஞ்சென்ற பத்மநாதன், காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சற்குணேஸ்வரி (வதனி- கொழும்பு), கலைமகள் (ஜேர்மனி), றொரண்டா (கனடா), தனுஜா (கனடா) ஆகியோரின் மாமியாரும், றமிலா, சினி, றொனி, ஆமிதிலின் ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்ற இராஜரெத்தினத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது 6ஆம் வாய்க்கால் இல்லத்தில் 08.09.2012 சனிக்கிழமை நடைபெற்று அன்று காலை10.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குணரெத்தினம் (பார் குணம்) கணவர்

(C-974)


PHARMACIST'S

EXTERNAL EXAM CONDUCTED BY CMCC. FACULTY OF MEDICINE - UNIVERSITY OF COLOMBO)

கல்வித் தகைமைகள்:- G.C.E O/L with pass in English. G.C.E. A/L with pass in 3 subjects including Chemistry
வயது:- எல்லை இல்லை.
மீட்டல் வகுப்புகள் :-2012/மார்கழி பரீட்சைக்கு சனி/ ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8.30 - மதியம் 12.30 வரை
புதிய வகுப்புகள்:- 2013/2014 பரீட்சைக்கு சனி/ஞாயிறு பிற்பகல் 1 - 5மணிவரை

ஞாயிற்றுக்கிழமை 09.09.2012 பிற்பகல் 1 மணிக்கு
A] B k z ©Aï ^ g «DÃ\ Vþ Ám

09.09.2012 காலை 8 மணிக்கு புதிய அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அப் போது பயிலுனர் மருந்தாளராக பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளலாம். கொழும்பில் பயிலுனர் மருந்தாளராக பதிவு செய்து, இரண்டு வருடங்கள் முடிந்த பின்னரே மேற்படி பரீட்சைக்கு தோற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:
T/P 0776256292

யாழ்ப்பாணக் கல்லூரி
(வெளிவாரிப் பட்டப்படிப்பு)
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(365)



'EASY ENGLISH'
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்கள் பெற : 773 212 711
(334)



செல்லா சினிமா- யாழ்ப்பாணம்
இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு
ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



10.30, 2.30, 6.30, 9.30 D.T.S
(C-941)


## தவறிவிட்டது

இல.85/3, திருவையாற்றைச் சேர்ந்த திருமதி பரமானந்தம் கிரிஜா என்பவரது கைப்பை ஒன்று முக்கிய ஆவணங்களுடன் திருமுறிகண்டி கொக்காவில் ஊடாக ஐயங்கன் குளம் செல்லும் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-978)

## பனை அபிவிருத்திச் சபை

### வாகனத் திருத்தம் மேற்கொள்வதற்கான கூறுவிலை கோரல்

எமது சபையின் பாவனையில் இருந்து வரும் பிக்கப் வாகனத்தை திருத்தம் செய்வதற்கு தகுதியான வாகனத் திருத்துனர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. குறித்த வாகனத்தை "**தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்**" எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு மேலதிக தகவல்களை பெற்று அதற்கான கூறுவிலையை எதிர்வரும் 21.09.2012 இற்கு முன்னர் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பசுபதி சீவரத்தினம்
தலைவர்,
பனை அபிவிருத்தி சபை

(C-968)


நாடகக் களப்பயிற்சி
5 நாள்கள்
G.C.E. A/L
பரீட்சை எழுதிய மாணவர்களுக்கானது
between 22/09 - 26/09
time; 8.30 - 4.30
15/09/2012 திகதிக்கு முன்னர் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்
பதிவு கட்டணம் 500/=
contact: 021 3216222
0773112692
செயல்திறன் அரங்க இயக்கம்
'அருளகம்' ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(பலாலி ஆசிரியர் கலாசாலை முன்பாக)
(C-974)



Cambridge Management College

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப்படுகின்றன.
மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.
6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


## கண்ணீர் அஞ்சலி

### செல்வி முருகர் சோதிமலர்

(அதிபர் கிளி/ புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயம்)



06.09.2012ந் திகதி அமரத்துவம் அடைந்த எங்கள் அதிபரின் ஆத்ம சாந்திக்காக பாடசாலைச் சமூகம் இப்பாரினிலே என்றென்றும் மனதார மன்றாடி அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

இத் தரணிதன்னில்
இவ்வேளைதனில்
இந்நாளிதனில்

பாடசாலைச் சமூகம்
கிளி/ புனித அந்தோனியார்
றோ.க. வித்தியாலயம்

(366)

## கண்ணீர் அஞ்சலி



தாய் மடியில் 24.09.1960

ஆண்டவன் திருப்பாதங்களில் 06.09.2012

கிளிநொச்சி முரசுமோட்டையை பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளி/ புனித அந்தோனியார் வித்தியாலயம் (முரசுமோட்டை) முதல்வரும் ஆகிய

### அமரர் முருகேசு சோதிமலர்

அன்னார் 06.09.2012 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு இவரது இழப்பினால் தவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அதிபர்கள் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்

(C-975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கூந்தல்

"சேர்! கூந்தலைப் பாதுகாப்பது எப்படி?" என்று ஒரு அம்மா வந்து கேட்டார்.

அந்த அம்மா அப்படி கேட்டதிலே எதுவித ஆச்சரியமும் இல்லை. ஆனால், அந்தக் கேள்வியை என்னிடம் வந்து கேட்டார்களே... அதுதான் ஆச்சரியம்.

''நான் உடனே ஒரு எண்ணெயின் பெயரைச் சொல்லி அந்த எண்ணெயைத் தினமும் தலையிலே தடவிக் கொண்டு வாருங்கள்'' என்று கூறினேன்.

"எதற்காக குறிப்பாக அந்த எண்ணெயைத் தடவச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

''நான் தினமும் அதைத்தான் உபயோகப்படுத்துகிறேன்'' என்றேன். அவர் என் தலையை நிமிர்ந்து பார்த்தார்.

''அப்படியென்றால் அது வேண்டாம் சேர்! வேறு ஏதாவது யோசனை இருந்தால் சொல்லுங்கள்'' என்றார்.

நான் உடனே என் யோசனையை வாபஸ் வாங்கிக் கொண்டு நிபுணர்கள் சொல்லும் யோசனையை எடுத்துரைக்க ஆரம்பித்தேன்.

பொதுவாக பெண்களுக்கு முடி கொட்டுவதற்கான முக்கிய காரணம் என்ன?

பலமான காற்று, கடுமையான வெயில் இவை இரண்டும் அடிக்கடி தலையிலே பட்டுக்கொண்டிருந்தால் முடி கொட்ட ஆரம்பித்து விடும்.

சாதாரணமாக நாம் பாவிக்கும் "சோப்"– இதைத் தலையிலே தேய்த்துத் தலை முழுகினாலும் முடி கொட்டும்.

மிகவும் முரடாக இருக்கும் கூந்தலுக்கு பிரஷை உபயோகப்படுத்தினாலும் முடிகொட்ட ஆரம்பிக்கும். சத்தான விற்றமின்கள் நிறைந்த உணவுகளைச் சாப்பிடாவிட்டாலும் முடி உதிரும்.

உடம்பிலே ஓமோன்கள் அளவு சரியாக இல்லாமல் இருந்தால், மன அழுத்தம், உடல் நிலையிலே மாறுபாடு, கூந்தலைத் தகுந்த முறையிலே பராமரிக்கவில்லை ஆகியவற்றினாலும் முடி உதிரும்.

சரி... இவையெல்லாம் இருக்கட்டும். கூந்தலை சரியான முறையிலே எப்படி பராமரிப்பது?

நிறைந்த சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். பழ வகைகள், பச்சைக் காய்கறிகள், முட்டை, பருப்பு வகைகள் ஆகிய உணவு வகைகளை நிறைவாகச் சாப்பிட வேண்டும்.

நாம் உண்ணும் உணவிலே சத்து குறைந்தால்... "இவர்களின் தலையிலே நாம் இருந்து என்ன பிரயோசனம்?'' என்று தலைமுடி நினைக்க ஆரம்பித்து விடும்.

தினமும் உடற்பயிற்சி செய்வது சாலச்சிறந்ததாகும். திறந்த வெளியிலே காற்றோட்டமான இடத்திலே நடப்பது நல்லது.

அவசியமானால் தினமும் கூந்தலை நீரினாலே அலசலாம்! அதுவும் லேசான இளஞ்சூடான நீரையே உபயோகப்படுத்த வேண்டும்.

தரமான, மிருதுவான ஷாம்பூவை உபயோகப்படுத்த வேண்டும்; அது எவ்வளவு மிருதுவாக இருக்கிறதோ அந்த அளவிற்கு கூந்தலுக்கு நல்லது.

ஷாம்பூவை பாவிக்கும்போது விரல்கள் நுனியால் நகம் படாமல் தலையிலே முன்பக்கத்தில் இருந்து பின்பக்கம் வரைக்கும் சில நிமிடங்கள் வரை தேய்க்க வேண்டும்.

கூந்தலைத் தானாகவே உலர விடுவதுதான் நல்லதாகும். சிலர் தலைமுடி உலர வைக்கும் கருவியைப் பயன்படுத்துவார்கள். அவையெல்லாம் முடி உதிர்வதை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

கூந்தல் ஈரமாக இருக்கும் போது சீப்பினால் வாரக்கூடாது. அப்படி செய்தால் கூந்தல் முறிந்து விடும்.

மிருதுவான அதிகம் இடைவெளியுள்ள சீப்பால் மெதுவாக, கூந்தல் அடியில் இருந்து தலையை வார வேண்டும்.

தலையில் அதிகம் எண்ணெய்ப் பசை இருப்பதால்தான் பொடுகு ஏற்படுகிறது. பொடுகு ஏற்பட்டால் அதை நீக்குவதற்கு வழி ஏற்படுத்த வேண்டும்.

கூந்தலுக்கு நாம் அதிக தொந்தரவு கொடுக்கக்கூடாது. அழுத்தமாகக் கட்டி இறுக்கமாகக் கொண்டை போட்டு அதிலே இரும்பாலான கொண்டை ஊசிகளை சொருகக்கூடாது. வெயிலில் போக வேண்டியிருந்தால், குடையை எடுத்து செல்லுங்கள்.

''கூந்தல் பராமரிப்பு'' என்று பல போலியான விளம்பரங்கள் வெளி வரும்... அதையெல்லாம் நம்பாதீர்கள்.

இவ்வாறாக முடியைப்பற்றிக் கேட்ட அந்த அம்மாவுக்கு அனைத்தையும் கூறி முடித்தேன்.

அப்போது அந்த அம்மா எனக்கு நன்றி தெரிவித்ததோடு நின்றுவிடாமல் ஒரு பெருமூச்சையும் வெளிச் செலுத்தினார்.

அப்போது அவர் கூறுகையில், ஒரு காலத்திலே என் கூந்தல் எப்படி இருந்தது தெரியுமா சேர்... இந்தக் கூந்தல் தரையைத் தொடும் அளவிற்கு இருந்தது'' என்று கூறினார்.

"எனக்குக்கூட அப்படித்தான்... தலைமுடி தரையைத் தொடும் அளவுக்கு இருந்தது'' என்று பெருமையாகச் சொன்னார்.

"அப்படியா?'' என்று மிகவும் ஆச்சரியமாக...

"ஆமாம்... தரையிலே படுத்திருக்கும்போது மட்டும்தான் அப்படி இருக்கும்'' என்று அசடு வழிய கூறினார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தாளையடி-கட்டைக்காடு வீதியிலுள்ள பாலத்தை புனரமைக்க பணிப்புரை

## ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(மருதங்கேணி)

தாளையடி-கட்டைக்காடு பிரதான வீதியிலுள்ள வெற்றிலைக்கேணி பாலத்தை உடனடியாக புனரமைப்புச் செய்யுமாறு ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் உதயன் தலைமையில் நடைபெற்றது.

பருவமழை தொடங்குவதற்கு முன்பதாக இப்பாலத்தினை புனரமைப்பு செய்து தருமாறு பொதுமக்களும் பொது அமைப்புக்களும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கு அமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியினைப் பெற்று இப்பாலத்தினை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப் பிரதேசம் யுத்தத்தினாலும் சுனாமியினாலும் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசமாக காணப்படுவதால் இங்குள்ள அனைத்து வீதிகளையும் விரைவில் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் வாரிவிட்டான் வீதி புனரமைப்பு காலதாமதம் அடைவதால் அதனை விரைவுபடுத்துமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், பிரதேச சபைகளின் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

தொடர்ந்து கல்வி, சுகாதாரம், வீதி, வாழ்வாதாரம், கடற்றொழில், விவசாயமும் கால்நடை வளர்ப்பும், நீர் வழங்கல், மின்சாரம், வீட்டுத்திட்டம், சமூக உட்கட்டமைப்பு, சமுர்த்தி போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

நாகர்கோவில் பகுதியில் விவசாய செய்கையை மேற்கொள்வதற்காகவும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்காகவும் முட்கம்பிகளைப் பெற்று பொதுமக்களுக்கு வழங்குமாறும் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரத்தை வழங்குமாறும் விவசாய நிலங்களில் உள்ள மண் அணைகளை அகற்றவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-9)

# சிறுவர் ஆக்கத்திறன் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தின் சிறுவர் ஆக்கத்திறன் கல்விக்கண்காட்சி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் சிறுவர் பூங்கா முன்பள்ளி பிரதான மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறவுள்ளது.

முன்பள்ளி பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி மாலதிதேவி விவேகானந்தன் கலந்து கொள்வார். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 90 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| தக்காளி | 70 | 40 | 50 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 60 | 70 | 65 |
| கரட் | 110 | 80 | 90 | 130 |
| பூசணி | 45 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 30 | 35 | 40 |
| வாழைக்காய் | 45 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 75 | 60 | 60 | 70 |
| பாகற்காய் | 70 | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- | -- |
| பயற்றங்காய் | 60 | 40 | 80 | 50 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 70 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 15 | 20 | 90 | 30 |
| போஞ்சி | 90 | 80 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 | -- |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 20 | 10 |
| தேசிக்காய் | 180 | 200 | 130 | 180 |
| தேங்காய் ஒன்று | 25-30 | 30 | 25 | 25 |

# இராசி பலன்

*07.09.2012*
*(ஆவணி 22, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*சப்தமி பின்னிரவு 4.38 மணிவரை*
*கார்த்திகை மாலை 6.12 மணிவரை*
*இராகுகாலம் 10.34-12.04 மணிவரை*
*சுபநேரம் 6.04-7.34 மணிவரை*
*கிருஷ்ண ஜெயந்தி.*

**மேடம்** சுப தகவல்கள் வந்து சேரும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர பெருமாளை வழிபட வேண்டிய நாள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் பயணமொன்று உருவாகும்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், அந்நிய உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கன்னி** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்** சேமிப்புகள் கரையக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், திடீர் பயணம் சிந்திக்க வைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு, தொழிலில் சில மாற்றங்கள் பற்றிய சிந்தனை உருவாகும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்திற்கு அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறும், கட்டடப் பணியில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தாய்வழி உறவினர்களால் ஏற்பட்ட தகராறுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சில திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாயக்கை பிரதேசத்தில் தேங்கும் திண்மக்கழிவுகள்

## மக்கள் விசனம்

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு மாயக்கை பகுதிகளில் பருத்தித்துறை நகர சபையின் கழிவு வாகனங்களினால் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதனால் அப்பகுதியில் பெரும் சுகாதார சீர்கேடு இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அல்வாய் கிழக்கு, மாயக்கை பகுதி மிகவும் பின்தங்கிய பிரதேசமாகும். அப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் அதிகளவானோர் மண் குடிசைகளிலே வாழ்ந்து வருகின்றனர்.

இதனால் இரவு நேரங்களில் அப்பகுதியில் கொட்டப்படும் கழிவுப் பொருட்களின் எச்சங்களை மண் குடிசைகளுக்கு விலங்குகள் எடுத்து செல்வதாகவும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே, உரிய தரப்பினர் அப்பகுதியில் கழிவுப் பொருட்களை கொட்டாதவாறு தடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)




# சட்ட விரோதமாக ஆஸி. செல்லாதீர்கள்

## ஐ.ஓ.எம். நிறுவனம் கோரிக்கை

(கரவெட்டி)

அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமாக செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு வடமராட்சி மக்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அரச சார்பற்ற பிரதிநிதிகளாக கலந்து கொண்ட குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் இவ் வேண்டுகோளை விடுத்தனர்.

அண்மைக்காலமாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்வோரின் தொகை அதிகரித்துள்ளதனால் அதிகளவான மக்கள் உயிர் ஆபத்தை எதிர்கொள்வதுடன் ஆபத்தான நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

இதனால் இச்சட்டவிரோத பயணமானது உடல், உள ரீதியாக மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் சட்ட சிக்கலுக்குள்ளும் உள்ளாகின்றனர்.

எனவே, பாதுகாப்பற்ற சட்டவிரோத பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் மேற்குறித்த நிறுவன பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர். (அ-3-24)

# இருநாட்கள் வதிவிட செயலமர்வு

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழ் உள்ள 12 கல்வி வலயங்களில் கடமையாற்றும் முறைசாராக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், முறைசாரக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் செயற்றிட்ட உதவியாளர்களுக்கான 2 நாட்கள் வதிவிடச் செயலமர்வு எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 7.30 மணிவரை மாகாணக்கல்வி திணைக்களத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்விற்கு மேற்படி பயிற்சியாளர்களுடன் கல்வி வலயங்களில் இருந்து இரண்டு சிரேஷ்ட போதனாசிரியர்களையும் (தொழிற்பயிற்சி) கலந்து கொள்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அனைத்து வலயக்கல்வி பணிப்பாளர்களையும் அவர் கேட்டுள்ளார்.

பயிற்சி பட்டறைக்கு வெளிமாவட்டங்களில் இருந்து வரும் அலுவலர்களுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் தங்குமிடவசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-3-15)

# வடமராட்சி கிழக்கிற்கு தனியான பிரதேச சபையை அமைத்துத் தாருங்கள்

## செயற்குழு கூட்டத்தில் மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கு தனியான பிரதேச சபையை அமைத்துத்தருமாறு மருதங்கேணி உதவி அரசாங்க பணிமனை செயற்குழுக்கூட்டத்தில் வடமராட்சி கிழக்கு மக்களின் பிரதிநிதிகள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு பிரதேச பெரும்பாலான பகுதிகள் அபிவிருத்தி இன்றி புறக்கணிக்கப்பட்டு வருகிறன.

அத்துடன் நீண்ட தூரம் பருத்தித்துறை பிரதேச சபைக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் இதனால் தமது மக்கள் பெரும் சிரமங்களை தினமும் அனுபவித்து வருவதாகவும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் வடமராட்சி கிழக்கு பிரதேசம் யுத்தத்தினாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.

இதனால் பிரதேச சபையின் கீழ் ஒதுக்கப்படும் அபிவிருத்திகள் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களுக்கு சென்றடைவதில்லை எனவும் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

எனவே, எதிர்காலத்தில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கென தனியான பிரதேச சபையை அமைத்துத் தர வேண்டும் எனவும் மக்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர். (அ-3-24)

# சரசாலை ஊடான பேருந்துசேவை சீரின்மையால் பொதுமக்கள் விசனம்

(கரவெட்டி)

பருத்தித்துறையில் இருந்து சரசாலை ஊடாக சாவகச்சேரிக்கு செல்லும் இ.போ.ச. பேருந்துகள் சீரின்மையால் மாணவர்கள் மற்றும் கடமைக்கு செல்லும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து காலை சாவகச்சேரி செல்லும் பேருந்துகள் நேரம் தாமதித்து அதிகளவான பயணிகளுடன் வருவதால் நீண்டநேரமாக காத்திருக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் சில பயணிகளை இப்பேருந்துகள் ஏற்றாது விட்டு செல்வதாகவும் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அத்துடன் ஒரு இ.போ.ச. பேருந்து மாத்திரமே இவ்வழியூடாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது.

இதனாலேயே பயணிகளும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக்கருத்திற் கொண்டு மக்களின் போக்குவரத்து நலன் கருதி போக்குவரத்து சேவையை இலகுபடுத்த ஆவன செய்யுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# வீதியை விடுவிப்பது தொடர்பில் உயர்மட்டத்துடன் பேசுவோம்

## இராணுவ அதிகாரிகள் உறுதியளிப்பு

(கரவெட்டி)

மருதங்கேணி சந்தியில் இருந்து ஆழியவளைக்கு செல்லும் வீதியை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை செயற்குழுக் கூட்டத்தில் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அதிகளவான பகுதிகளை யுத்தகாலத்தில் இராணுவம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

பின் யுத்தம் முடிவுற்றதும் படிப்படியாக இராணுவ முகாம்கள் அகற்றப்பட்ட போதும் மருதங்கேணி சந்தியில் இருந்து ஆழியவளை செல்லும் வீதியை விடுவிக்காமல் தொடர்ந்தும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

இதனால் அப்பகுதியில் பொது மயானம் உள்ளமையால் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தொடர்ந்தும் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட இராணுவ உயர் அதிகாரிகள் இப்பகுதியை விடுவிக்க வேண்டுமென மக்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர். இதற்குப் பதிலளித்த இராணுவ அதிகாரி இது தொடர்பாக தமது உயர்மட்ட கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் உறுதியளித்தார். (அ-3-24)

# நிறுவுநர் நினைவும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

வாழ்வக ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவாலய நிறுவுநர் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதி வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வக தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வடமாகாண விசேட கல்வி இணைப்பாளர் திருமதி நிஷாந்தி பெர்னாண்டோ, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் வி.கே.இரத்தினகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொள்வார். வலுக்குன்றுதலும் அதன் சவால்களும் என்னும் தலைப்பிலான நினைவுப் பேருரையை உலக சுகாதார நிறுவன ஆலோசகர் டாக்டர் நெ.சிவராஜா ஆற்றுவார். தொடர்ந்து யா/இராமநாதன் கல்லூரி ஆசிரியர் திருமதி சர்மிளா ரதிதரனின் புல்லாங்குழல் அரங்கிசை நடைபெறுமென வாழ்வக சமூகம் அறிவித்துள்ளது. (அ-9)





வடமாகாணத்தின் பொதுப்பரீட்சைகளில் மாணவர் அடைவு வீதத்தை மேம்படுத்தும் செயற்றிட்டங்களின் மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அவர் உரையாற்றுவதையும் வடக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) எஸ்.உதயகுமார், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட வடமாகாண வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், யுனிசெவ் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After A/L Join Srilanka's #1

## DiTEC INTERNATIONAL

### Diploma in Information Technology (International Recognized)

தகவல் தொழில்நுட்பத்துறையில் குறித்த அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்கும் இத்துறையில் பூரணமான ஒரு அறிவினை பெற DiTEC வழிவகுக்கும். பொறியியல்துறை, மருத்துவம், கணக்கியல், முகாமைத்துவம் போன்ற ஏனைய துறைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் பிரயோகங்களை துறைசார்ந்தவிருத்தி செய்ய விரும்புபவர்களுக்கும் இக் கற்கைநெறி மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**காலம் 4 மாதங்கள்**

**சிறப்பம்சங்கள்**

- இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட Malaysia இல் அச்சிடப்பட்ட சான்றிதழ்.
- சர்வதேசத்தினால் (Edexcel-UK) இனால் வழங்கப்படும் மேலதிக சான்றிதழ்.
- BCS-UK இனால் வழங்கப்படும் Transcript
- பட்டப்படிப்பிற்கான முதல் ஆண்டிற்கு சமனான கற்கைநெறி (B.Sc 1st Year)
- தரமான ஆசிரியர் குழாம் மற்றும் அதிக Practical வகுப்புக்கள்
- IT கற்கைநெறி கற்பவர்களுக்கு Diploma in English இல் 20% கட்டணச்சலுகை

இலங்கை அரசாலும் UK, USA, Australian மற்றும் European நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட உடனடி தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்

## DiCA

### Diploma in Computerized Accounting

**முற்றிலும் இலவசம் எவ்வித கட்டணங்களும் கிடையாது. இவ் அரிய வாய்ப்பு எம்மிடம் மட்டுமே....!!!**

(Rs. 17,000 பெறுமதியான கற்கைநெறி இலவசமாக)

**Course Contents**

- MYOB
- Quick Books
- ACCPAC
- SAGE
- Peachtree
- Tally

காலம் 3 மாதங்கள்



## After your A/Levels...

Join ESOFT for IT, English & Business Management



ESOFT The Leader in Professional ICT Education

## edexcel HND

**in Computing**
Leading to B.Sc. (Hons) in Computing

**in Business**
Leading to B.A. (Hons) in Business & Finance



**Diplomas**

- Diploma in Information Technology
- Diploma in Web Engineering
- Diploma in Software Engineering
- Diploma in Computerized Accounting
- Diploma in Business Management
- Diploma in English

**HOTLINE 077 309 9 308**

**Degrees**

BIT Bachelor of Information Technology (UCSC)
Those who sat for A/Levels this time can apply for this degree on pending results without wasting another year.

bcs The Chartered Institute for IT — Higher Education Qualifications
In less than 2 years you can earn an equivalent to Honours Degree in IT

edexcel HND (Higher National Diploma)
On completion of this programme you can directly enter the final year of a British Degree in IT or Business Management

@ ESOFT The Leader in Professional ICT Education • in Collaboration with bucks new university

**September Intake** | **Registration Now On**

**Top-up Degrees** for HND completed students
*Special Offer*
*FREE tour to Malaysia*

**HND in Computing**
**HND in Business**
for post A/Level students
*Special Offer*
FREE TAB with 3G and WiFi

## புதிய பிரிவுகள்: 8th Sept, 10th Sept - 9:00 am

ESOFT The Leader in Professional ICT Education

## ESOFT Computer Studies [Pvt] Ltd

17/1,Brown Road,Jaffna. Tel:021 222 4142 Email:jaffna@esoft.lk

(#972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு தமிழர் மீது அக்கறை இல்லை என்பதற்காக தமிழகம் அவ்வாறு இருக்காது

## தமிழர் உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்— ஜே.வி.பி.

**அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கைகளினால் நாட்டிற்கு பேராபத்து ஏற்படப் போகின்றது. இலங்கை வாழ் தமிழர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்காமையே தமிழகத்தின் எதிர்ப்புகளுக்கு பிரதான காரணம். எனவே, இந்தியாவுடன் வீணாக முரண்படாது உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வை தேட இனியேனும் அரசு முயற்சிக்க வேண்டும் என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. அரசியல் கைதிகளை தொடர்ந்தும் சிறைகளில் தடுத்து வைத்து அடித்துக் கொலை செய்தால் அதனை எந்தவொரு நாடோ தரப்போ வேடிக்கை பார்க்காது. முதலில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க அரசு கற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டின் பண வீக்கம் 8.9 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் வாழ்வாதார செலவுகள் மிகவும் உச்ச நிலையை அடைந்துள்ளன. எதிர்வரும் நாட்களில் எரிபொருட்களின் தட்டுப்பாடு ஏற்பட்டு பெரும் பிரச்சினைகள் உருவாகப் போகின்றன. இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடாது முரண்பாடுகளையும் வீண் பகைகளையும் அரசு வளர்த்து வருகின்றது.

இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகளில் மாநாடுகளை நடத்தவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் அரசாங்கத்தின் அடிப்படை தன்மையற்ற நடவடிக்கைகளே பிரதான காரணமாகும்.

யுத்தத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சுதந்திரத்தை அரசு வழங்கவில்லை. மீள்குடியேற்றம் மற்றும் அடிப்படை உதவிகளை செய்தல் என்பவற்றிலிருந்து முழு அளவில் இழுத்தடிப்பையும் ஏமாற்றுப் போக்கையும் அரசு கையாண்டு வருகின்றது. இதனால் தமிழகத்தின் எதிர்ப்புகள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக இலங்கைக்கு எதிராக தமிழக முதல்வர் ஜெயலலிதா செயற்பட அரசின் போக்கே காரணம். அரசாங்கத்திற்கும் தமிழ் மக்கள் மீது அக்கறையில்லை என்பதற்காக தமிழகமும் அவ்வாறே இருந்து விடும் எனக் கூற இயலாது. எனவே, தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாது இந்தியாவிற்கு எதிராக உள்நாட்டில் போராட்டங்களை முன்னெடுத்து உருவப் பொம்மைகளை எரிப்பதால் எவ்விதமான பலனும் கிடைக்கப் போவதில்லை. மாறாக மீண்டும் பிரிவினை வாதமே தோன்றும். நாட்டில் மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்திற்கும் மதிப்பளித்து செயற்பட வேண்டும் என்றார். (அ-2)

# அனுமதிக்கப்பட்ட ஏக்கரிலும் பார்க்க அதிகமான ஏக்கரில் நெற்பயிர்ச்செய்கை

## விவசாயிகள் குற்றச்சாட்டு

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் இம்முறை சிறுபோக நெற்செய்கையின் போது 400 ஏக்கருக்கு மேல் சட்டவிரோத நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இச்சட்டவிரோத விதைப்புக்கள் தொடர் கதையாகவே உள்ளதாகவும் இதைத் தடுக்க வேண்டிய அரச அதிகாரிகள் அக்கறை செலுத்துவதில்லை எனவும் கமக்கார அமைப்புக்களும் விவசாயிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனிக்குளத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் நீர்மட்ட நிலை குறைவாகவே பேணப்படுகின்றது.

ஆயினும் வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் மீள்குடியேறிய மக்களின் நலன் கருதி ஆயிரத்து 215 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கியிருந்தனர்.

இந்நிலையிலேயே 400 ஏக்கர் இன்னும் அதிகமாக விளைவிக்கப்பட்டுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்கள தகவல்களின் படி அறிய முடிகின்றது. கடந்த வருடமும் இதேபோல் 500 ஏக்கருக்கு மேல் சட்டவிரேர்த நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமையினாலேயே இது தொடர்கின்றது.

இனிவரும் காலங்களிலாவது இச் செயற்பாடு தொடராது இருக்க முல்லை. மாவட்ட அரச அதிபர் இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டுமென கமக்கார அமைப்பினரும் விவசாயிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# அரசாங்கம் தோற்பதில் 22.6 வீத மக்களுக்கு விருப்பம்

## முன்னாள் சோசலிச கட்சி தகவல்

(கொழும்பு)

அரசாங்கம் தோற்கடிக்கப்பட வேண்டுமென 22.6 வீதமான மக்கள் விரும்புவதாக முன்னணி சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் ஏழு மாவட்டங்களில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறித்த மாவட்டங்களை சேர்ந்த 14.8 வீதமான மக்கள் மட்டுமே அரசாங்கம் தேர்தலில் வெற்றியீட்ட வேண்டுமென விரும்புகின்றனர். வாழ்க்கைச்செலவு அதிகரித்துச் செல்வதாகவும் இதனால் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் எனவும் 22.6 வீதமான மக்கள் கருதுகின்றனர். 47.2 வீதமான மக்கள் தேர்தலில் வாக்களிக்கப் போவதில்லை எனவும் ஆளும் கட்சி மீது நம்பிக்கையில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய ஆட்சி முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென 15.4 வீதமான மக்கள் விரும்புகின்றனர். நாட்டின் பொருளாதார நிலைமை, கல்வித்துறை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணிகள் தொடர்பில் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# பாதுகாப்பும் பறிபோனது; பதறுகிறார் அசாத் சாலி

தமக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண வேட்பாளர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் ஆணையாளரின் பணிப்புரைகளை மீறி அரசாங்கம் தமக்கான பாதுகாப்பை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளது. இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் பாதுகாப்பு அளிக்கப் படவில்லை.

தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை பொலிஸார் ஏற்றுக் கொண்டு செயற்பட வேண்டியது அவசியமானது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் நிச்சயமாக தோல்வியைத் தழுவும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 42 வீத முஸ்லிம்களும் 38 தமிழர்களும் 20 சிங்களவர்களும் வாழ்ந்து வருவதாகவும் இனச் சமூகங்களே தேர்தல் வெற்றியை நிர்ணயிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதாக வெளிக்காட்டிக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஓர் அரசாங்கம் என்றார். (அ-2)

# இந்தியாவுடனான உறவு ஒருபோதும் பாதிக்காது

## அமைச்சர் டலஸ் திட்டவட்டம்

தமிழகத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்ற சம்பவங்கள் இரு நாடுகளினதும் உறவுகளை பாதிக்காது என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை யாத்திரிகர்கள் மீது தமிழகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களினால் மத்திய அரசாங்கத்துடன் நீடித்து வரும் உறவுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மத்திய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் உறவுகளை பேணுவோம். அண்மைய சம்பவங்களினால் மத்திய அரசாங்கத்துடனோ அல்லது இந்திய மக்களுடனோ பிரச்சினை ஏற்படுத்திக் கொள்ளப் போவதில்லை.

இந்தசம்பவங்களை இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசலை ஏற்படுத்த அனுமதிக்க கூடாது என்றார். (அ-2)





திருநெல்வேலி சிமாட் கிட்ஸின் ஆங்கில தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வி.பரந்தாமன் உரையாற்றுவதையும் மழலைகளின் நடன நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிடக் கோரிக்கையாளர் குறித்த ஆஸியின் கொள்கை பிழையானது

## ஆஸி.கிரீன்கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் குறித்த அரசாங்கத்தின் கொள்கை பிழையானது என அவுஸ்திரேலிய கிரீன்கட்சியின் செனட்டர்லீ ரியன்னன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் திட்டமானது மிகவும் மோசமானது.

அவுஸ்திரேலிய எதிர்க்கட்சிகளின் இந்தத் திட்டம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக நாடு கடத்த வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரியிருந்தன.

சிவில் யுத்தம் நிறைவடைந்துள்ளதாகவும் புகலிடம் கோருவோரில் புலர் பொருளாதார நோக்கில் புகலிடம் கோருவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியிருந்தன. இவ்வாறான கொள்கைகள் சர்வதேச சட்டத்திற்கு முரணானது என ரியன்னன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# அப்பாவி சிங்கள மக்களை தாக்குவது தமிழரின் பண்பாட்டுக்கு எதிரானது

## தமிழருவி மணியன் சுட்டிக்காட்டு

(சென்னை)

தமிழகத்திற்கு வழிபாட்டிற்காக வரும் அப்பாவி சிங்கள மக்களை தாக்கக் கூடாது. அவ்வாறு தாக்குதல் நடத்துவது காட்டுமிராண்டித்தனம் என்று காந்திய மக்கள் இயக்கத்தின் தலைவர் தமிழருவி மணியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டின் வழிபாட்டுத் தலங்களில் வழிபடுவதற்காக வந்த சிங்களவர் மீது நடத்த முயன்ற தாக்குதல் எந்த வகையிலும் நாகரிக சமுதாயத்தின் நல் அடையாளம் இல்லை.

எந்த நிலையிலும் அப்பாவி சிங்கள மக்கள் மீது தன்னுடைய தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தியதே இல்லை. அதை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை இராணுவத்துக்கு இந்திய மண்ணில் பயிற்சி அளிப்பதை கடுமையாக எதிர்த்து போராடுவது வரவேற்புக்குரியது.

ஆனால், அப்பாவி சிங்களவர்களை தமிழ் மண்ணில் தாக்க முயல்வது தமிழ் இனம் காலம் காலமாக பராமரித்து வரும் பண்பாட்டுக்கு எதிரானது.

கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற காட்டுமிராண்டித்தனத்தை கையில் எடுப்பது இந்த இனத்துக்கு பெருமை தராது.

இதுபோன்ற தாக்குதல்கள் உலக சமுதாயத்தின் ஆதரவு ஈழத் தமிழர்களுக்கு வந்து சேர்வதை கெடுக்கும்.

ஈழத் தமிழர்களுக்காக அரசியல் உரிமைகளை அடைய முயல்வது வேறு அப்பாவி சிங்களவர்களை தமிழகத்து மண்ணில் தாக்குவதன் மூலம் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவது என்பது வேறு.

இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள வேற்றுமையை இன உணர்வாளர்கள் புரிந்து கொண்டு செயற்படுவதுதான் ஈழத்திலும் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு நன்மை பயக்கும் என அறிக்கையில் கூறியுள்ளார். (அ-2)

# ஐ.ம.சு.கூட்டமைப்பின் கூட்டத்தில் ஹிருணிகா

(சென்னை)

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் என்னையும் இணைத்துக் கொண்டு பொது எதிர்க்கட்சியொன்றை அமைக்க முயற்சிக்கின்றார்கள் என ஹிருணிகா தெரிவித்துள்ளார். எனினும் இந்தத் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஹிங்குராங் கொடவில் நடைபெற்ற இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா மஹாஜன கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையே நான் பிரதிநிதித்துவம் செய்கின்றேன். கூட்டமைப்பிலிருந்து விலகி வேறு கட்சியுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை.

தந்தையின் இரத்தம் வியர்வையினால் பாதுகாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தொடர்ந்தும் பாதுகாப்பேன்.

ஆளும் கட்சியின் வெற்றியை உறுதி செய்யும் நோக்கில் இறுதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றேன் என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரதலக்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகா எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.09 07

★70-ரோமப் பேரரசின் இராணுவம் தளபதி டைட்டஸ் தலைமையில் ஜெருசலேமைக் கைப்பற்றியது.

★1539-குரு அங்காட் தேவ் சீக்கியர்களின் இரண்டாவது குருவானார்.

★1812-நெப்போலியன் ரஷ்யாவின் முதலாம் அலெக்சாண்டரின் படைகளை பரடீனோ என்ற கிராமத்தில் தோற்கடித்தான்.

★1821-வெனிசுவேலா, கொலம்பியா, பனாமா மற்றும் எக்குவாடோர் ஆகியவற்றை உள்ளடக்கிய கிரான் கொலம்பியாக் குடியரசு உருவானது. சீமோன் பொலிவார் இதன் தலைவர் ஆனார்.

★1822-பிரேசில் போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★1860-லேடி எல்ஜின் நீராவிக்கப்பல் மிச்சிகன் வாவியில் மூழ்கியதில் 400 பேர் வரையில் உயிரிழந்தனர்.

★1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகரில் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

★1929-பின்லாந்தில் குரு என்ற பயணிகள் கப்பல் மூழ்கியதில் 136 பேர் உயிரிழந்தனர்.

★1940-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய மக்களை அச்சுறுத்தும் வகையில் ஜேர்மனியினர் லண்டன் நகரில் 300 தொன் கன வெடிகுண்டுகளையும் 13 ஆயிரம் எரிகுண்டுகளையும் வீசினர். 57 நாட்கள் தொடர்ந்து குண்டு வீச்சு இடம்பெற்றது.

★1942-உக்ரேனில் 8 ஆயிரத்து 700 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொலைக் களத்திற்கு அனுப்பப்பட்டனர்.

★1943-டெக்சாசில் உணவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கிய 55 பேர் உயிரிழந்தனர்.

★1950-ஸ்கொட்லாந்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 13 பேர் உயிரிழந்தனர். 116 பேர் காப்பாற்றப்பட்டனர்.

★1953- நிக்கிட்டா குருசேவ் சோவியத் ஒன்றியத்தின் மத்திய குழு தலைவரானார்.

★1965-இந்திய எல்லைகளில் சீனா தனது படைகளைக் குவிக்கப்போவதாக அறிவித்தது.

★1977-பனாமா கால்வாய் தொடர்பாக பனாமாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பனாமா கால்வாயின் கட்டுப்பாட்டை பனாமாவுக்குக் கையளிப்பதாக அமெரிக்கா உறுதி வழங்கியது.

★1978-கொழும்பு. இரத்மலானை விமான நிலையத்தில் அவ்ரோ விமானம் நிலையத்தில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

★1978- பல்கேரிய அதிருப்தியாளர் கியோர்கி மார்க்கொவ் லண்டன் வாட்டர்லூ பாலத்தைக் கடக்கையில் பல்கேரிய இரகசிய பொலிஸார் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1986-தென்னாபிரிக்காவின் அங்கிலிக்கன் திருச்சபையின் முதலாவது கறுப்பினத் தலைவராக டெஸ்மண்ட் டூட்டு நியமிக்கப்பட்டார்.

★1986-சிலியின் ஜனாதிபதி ஆகுஸ்டோ பினொச்செ கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினார்.

★1988-ஆப்கானிஸ்தானின் முதலாவது விண்வெளி வீரர் அப்துல் அஹாட் மொஹ்மண்ட் சோவியத்தின் சோயூஸ் விண்கலத்தில் பூமி திரும்பினார்.

★1998-கூகுள் ஆரம்பிக்கப்பட்டது.

★1999-ஏதென்சில் இடம்பெற்ற 5.9 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் 143 பேர் உயிரிழந்தனர்.

★1999-யாழ்ப்பாணம் செம்மணியில் கொல்லப்பட்ட 600 இற்கும் மேற்பட்ட தமிழர்களின் புதைகுழி விபரம் தெரியவந்தது.

★2004- சூறாவளி ஐவன் கிரனாடாவைத் தாக்கியதில் 39 பேர் உயிரிழந்து 90 வீதமான கட்டடங்கள் சேதமாயின.

### பிறப்புக்கள்

★1533- முதலாவது எலிசபெத், இங்கிலாந்தின் அரசி (இ.1603)

★1913-அப்துல் காதர் லெப்பை, இலங்கை கவிஞர் (இ.1984)

★1953-மம்முட்டி, மலையாள நடிகர்

★1984-பர்வீஸ் மவுரூவ், இலங்கையின் துடுப்பாளர்

★1984-மலிங்க பண்டார, இலங்கையின் துடுப்பாளர்

### இறப்புக்கள்

★1949-எல்ரன் மாயோ, அவுஸ்திரேலிய உளவியலாளர் (பி.1880)

★1997- மொபுட்டு செசெ, செக்கோ சயீரின் குடியரசுத் தலைவர் (பி.1930)

### எல்டன் மேயோ

எல்டன் மேயோ அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு உளவியலாளர் மற்றும் மெய்யியலாளர். இவர் தொழிற்றுறை அமைப்பில் உழைக்கும் பணியாளர்களின் செயற்பாடுகளை ஆய்வு செய்தார். அந்த ஆய்வுக்கு ஹாதோர்ன் ஆய்வுகள் என்று பெயர். இந்த ஆய்வு முடிவானது மேலாண்மையியலில் மனித உறவுகள் கொள்கை Human relations theory எனும் புதிய பிரிவுக்கு வழி வகுத்தது. இதனால் இவர் மனித உறவுகள் கொள்கையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் 1919-1923 காலத்தில் பணியாற்றிய இவர் பின்னர் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். 1926 முதல் 1947 வரை ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர் வளர்மதி வி.க. கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று





(வேலணை)

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கரப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இன்று இரவு 6.30 மணிக்கு புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் தலைமையில் நடைபெறும் இவ்விறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி ஆலோசகர் தேசமானிய இராமச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் மற்றும் கோப்பாய் பிரதேச செயலக செயலாளர் பிரதீபனும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி இந்து இளைஞர் அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதவுள்ளன. இந்து இளைஞர் அணி யாழ். மாவட்டத்தில் நடைபெறும் கரப்பந்தாட்ட தொடர்களில் தொடர்ந்து சம்பியன் பட்டங்களை பெற்று வருவதால் இந்து இளைஞர் அணியின் சம்பியன் வேட்டை தொடருமா அல்லது இந்து இளைஞர் அணியின் சம்பியன் வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.




# அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

அரச அதிபர்·வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பங்குபற்றி வந்த உதைபந்தாட்ட முதலாவது போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகத்தை எதிர்த்து வேலணை பிரதேச செயலகமும் மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை அணியினர் மோதவுள்ளனர். (3-24)

# அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக வடமாகாண ரீதியான கிரிக்கெட் போட்டி

(வேலணை)

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் மிகப் பிரமாண்டமாக நடத்தும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர் வரும் 8,9,15,16,22 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மகா ஜனாக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

40 கழகங்களுக்கு மேல் பங்குபெறும் இத்தொடரில் 40 கழகங்களும் ABCD என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. AB குழுக்களுக்கான போட்டிகள் 8,9 ஆம் திகதிகளிலும்CDகுழுக்களுக்கான போட்டிகள் 15,16 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது. இத்தொடரில் பங்குகொள்ளும் அணிகள் குறித்த நேரத்தில் போட்டிகளுக்கு வருகை தந்து போட்டிகளை குறிப்பிட்ட காலத்தில் நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கலந்துரையாடல்

(வேலணை)

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 21 வயதுப் பிரிவிற்கான உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்துக் கழகங்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கானை பிரதேச செயலக பதில் விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

# சிவகுருநாதர் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி; யாழ்.இந்துக் கல்லூரி, கொழும்பு ஆனந்தா கல்லூரி

## இன்று பலப் பரீட்சை

(வேலணை)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கும் இடையில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் இரு நாட்களைக் கொண்ட மாபெரும் துடுப்பாட்டப் போட்டி கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆனந்தாக் கல்லூரியின் புகழ்பெற்ற ஆசிரியரும் பகுதித் தலைவருமான சிவகுருநாதனின் ஞாபகார்த்தமாக இத்துடுப்பாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி 1886 ஆம் ஆண்டு சிங்கள கலாசாரத்தையும் பௌத்த நாகரிகத்தையும் வளர்ப்பதற்காக கொலனஸ் ஹென்றி ஸ்ரீல் ஒல்கோட் என்பவரால் ஆண்கள் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டது.

இப்போது ஒரு தேசியக் கல்லூரியாக வளர்ந்து நிற்கின்றது. இலங்கை தேசிய துடுப்பாட்ட அணியில் விளையாடி இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை 1996 ஆம் ஆண்டு பெற்றுக் கொடுத்த இலங்கைஅணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க மற்றும் முன்னாள் தலைவர் மாவன் அத்தபத்து, திலான் சமரவீர ஆகியோர் இக்கல்லூரியில் கல்வி கற்றவர்கள் ஆவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 1890 ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சிந்தனையில் தமிழ் கலாசாரத்தையும் சைவ சமயத்தையும் வளர்க்கும் நோக்குடன் சட்டத்தரணி நாகலிங்கத்தினாலும் பசுபதி செட்டியாரினாலும் ஆண்கள் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது தேசிய பாடசாலையாக வளர்ந்து நிற்கின்றது. இக்கல்லூரியின் துடுப்பாட்ட அணியினர் பல வருடங்களாக இலங்கை துடுப்பாட்ட சபை நடத்தும் போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி வருகின்றனர். இத்துடுப்பாட்ட போட்டியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கொழும்புக் கிளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்துகின்றன. இத்துடுப்பாட்ட போட்டிக்கு கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் டு.ஆனு.தர்மசேனாவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவும் தலைமை தாங்கவுள்ளனர். இனிவரும் காலங்களில் இத்துடுப்பாட்ட போட்டி வருடாவருடம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான துடுப்பாட்ட போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்கள் பிரகாசிக்கும பட்சத்தில் தேசிய துடுப்பாட்ட அணி யில் சேர்ந்துக் கொள்வதற்கான வாய்ப் பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின் றது. இத்துடுப்பாட்ட போட்டிகளின் மூலம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் மேலோங்கச் செய்ய முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். மிகப் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இத்துடுப்பாட்டப் போட்டியின் தொடக்கவிழாவுக்கு அர்ஜுன ரணதுங்க, மஹேல ஜெயவர்த்தன மற்றும் மேலும் சில இலங்கை அணிவீரர்களும் கலந்து கொள்ள இருக்கின்றனர் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

33



செங்கை ஆழியான்

மூன்று மன்னர்கள்

மகாநாமனுக்கு இரு மனைவியர், பட்டத்து மகஷிக்குப்பிறந்த மகள் சம்ஹா ஆவாள். மற்றைய தமிழ்ப் பெண்ணுக்கு சொத்திசேனன் என்றொரு மகன் பிறந்தான். மகாநாமன்



தாதுசேனன் நிர்மாணித்த அவுக்கணபுத்தர்சிலை

மரணமானதும், சொத்திசேனன் அரசகட்டிலேறினான். அவன் ஆட்சிப் பீடமேறிய அன்று மாலையே, சம்ஹாவால் கொலை செய்யப்பட்டான். அதன் பின்னர் சம்ஹாவின் ஆசைநாயகனான முரசடிப்போனை மணந்து அரசனாக்கினாள். அவன் சட்டகக் குளத்தை நிர்மாணித்தவனாவான். ஓராண்டு காலத்துள் அவன் இறந்து போனான். இம்மன்னனின் அமைச்சன் அரசனின் பூதவுடலை இரகசியமாகத் தகனம் செய்துவிட்டு மித்தசேனன் என்ற அரிசி களவாடும் கள்வன் ஒருவனை அரசனாக்கும் நோக்கோடு, அரண்மனைக்குள் இரகசியமாக இருக்கச் செய்தான்... "அரசன் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் உள்ளான்" என்று மக்களை நம்ப வைத்தனர். ஒருகட்டத்தில் "எங்கள் மன்னன் எங்கே? எங்களுக்கு அவரைக் காட்டுங்கள்" என்று மக்கள் குரல் எழுப்பியபோது, மித்தசேனனை யானையிலேற்றி அரசனாக நகர்வலம் வரச்செய்தான். மக்கள் அவனைத் தம் மன்னனாகவே எண்ணி ஏற்றனர். இவன் ருவான்வெலிசாய தாதுகோபத்தின் யானைச் சிற்பங்கள் கொண்ட மதிலில் ஏறிபடிகளோடு கூடிய வாசல்களை அமைத்துக் கொடுத்தான். ஓராண்டு ஆட்சி செய்தபின்னர் மரணமுற்றான். மகாசேனனின் பின் ஆண்ட மூன்று மன்னர்களும் கி.பி.480 இலிருந்து 509 வரை அரசாட்சி புரிந்தனர்.

## தாதுசேனனும் காசியப்பனும்

இலங்கை வரலாற்றில் அனுராதபுரக் காலம் முதன்மை வாய்ந்தது. பண்டுகாபயனால் தாபிக்கப்பட்ட இந்த இராச்சியம் மகாசேனன் காலம்வரை முந்திய அனுராதபுரக் காலம் என்றழைக்கப்பட்டது. கி.பி.5 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்திய காலத்தை அதாவது, தாதுசேனனின் ஆட்சியிலிருந்து பிந்திய அனுராதபுரகாலம் என்றழைக்கப்படலாயிற்று. பிந்திய அனுராதபுரகாலத்தில் தென்னிந்தியச் செல்வாக்கு சகல துறைகளிலும் அதிகரித்துக் காணப்பட்டது.

### பாண்டு மன்னன் படையெடுப்பு

தென்னிந்தியாவிலிலுந்து படையுடன் வந்த பாண்டு என்ற தமிழன், மித்தசேனனைப் போர்க்களத்தில் கொன்று அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இக்காலத்தில் தென்னிந்தியாவில் அரசியல் நிலையில் குழப்பநிலை காணப்பட்டது. களப்பிரரின் ஆட்சியில் தமிழகம் ஆட்பட்டிருந்தது. அவ்வேளையில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கை மீது படையெடுப்பு நிகழ்ந்தது. பாண்டு என்ற பெயரைக் கொண்டு படையெடுத்து வந்தவன் பாண்டிநாட்டவன் என்று கருதப்பட்ட போதிலும் அவனைச் சோழநாட்டவனாகக் கருதுவர். பாண்டுவின்படை யெடுப்பின் பின்னர் ஏறத்தாள இரண்டு தசாப்தங்களுக்கு மேல் தமிழர் ஆட்சி அனுராதபுரத்தில் நிலவியது. பாண்டுவுக்கு இரண்டு புதல்வர்கள் பாரிந்தன், குட்டபாரிந்தன் என்றிருவர் இருந்தனர். அவர்கள் இருவரும் ஒருவர் பின்னொருவராக ஆட்சி புரிந்தனர். அவர்களின் பின்னர் திரீதரன், தாடியன், பீடியன் என்ற தமிழர்கள் அனுராதபுரத்தை ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுடைய காலத்தில் ஆட்சி அமைதியற்றதாகக் காணப்பட்டது. எனினும் அத்தமிழ் மன்னர்கள் பௌத்த சமயத்துக்கு ஆதரவாக விருந்தனர் எனத் தெரிகின்றது.

# தாதுசேனனும் காசியப்பனும்



தாதுசேனன் நிர்மாணித்த காலவாவி

தமிழரின் ஆட்சியை தாதுசேனன் என்பவன் இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வந்தான்.

### தாதுசேனன்

தாதுசேனனன் மோரிய (மயில்) வம்சத்து இளவரசன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். அனுராதபுர அரசமரபு ஆட்சியிலிருந்தபோது நகரத்தில் மோரியவம்சம், இலம்பகர்ணவம்சம் என்பன இருந்து வந்ததாக அறியப்படுகின்றது. யசலாலகதீசனிடமிருந்து அரசு பறிபோனபோது அனுராதபுரத்தில் மோரியர்கள் வசிப்பதற்கு அஞ்சி உருகுணைக்குச் சென்று வாழ்ந்தார்கள். அவர்களின் குலத்தில் உயர்ந்தவனாகவும் திறமைசாலியாகவும் தாதுசேனன் விளங்கினான். அனுராதபுரத்தில் தமிழர்களாட்சி ஏற்பட்டதும், அரசு குடும்பத்தினர் மகாவலி ஆற்றைக் கடந்து உருகுணைக்குத் தப்பிச் சென்றனர். வாயிற்காவலன் சுபா என்பவனோடு, தப்பிச் சென்ற மோரிய மரபினர், அங்குமிங்கும் அலைந்து கரந்துறைந்தனர். அவர்களில் ஒருவன் நந்திவாபி கிராமத்தினைச் சேர்ந்த தாடநாமன் என்பவனின் மகன் தாதுசேனன் ஆவான். தாடநாமனுக்கு தாதுசேனன், சிலாதிஸ்ஸபோதி எனும் இரு புதல்வர்கள் இருந்தனர்.

தாதுசேனனின் தாய்மாமனான பிக்கு, அரசனாவதற்குரிய அறிகுறிகள் தாதுசேனனிடம் இருப்பதைக் கண்டான். சிலசம்பவங்கள் அவனது எண்ணத்தை உறுதிப்படுத்தின. இவ்விடத்தில் வழமைபோல சூளவம்சம் நம்பகத் தன்மையற்ற கதைகளைக் கூறிச் செல்கின்றது. ஒருநாள் ஒரு மரத்தடியில் தாதுசேனன், தியானத்தில் இருக்கும்போது, திடீரென முகில் அவ்விடத்தில் கூடி மழையாகப் பொழிந்தது. ஒரு சர்ப்பமானது தாதுசேனனின் தலைமேல் தனது படத்தை விரித்து மழையிலிருந்து பாதுகாப்பு வழங்கியதை மாமன் கண்டார். இன்னொரு தடவை தாது சேனன் தியானத்தில் இருக்கும்போது, கோபம் கொண்ட ஒரு மனிதன் சாணத்தை அள்ளி அவனது தலையை நோக்கி எறிந்தான். அப்போதும் தாதுசேனனின் தியானம் கலையவில்லை. இவற்றினை அவதானித்த மாமன், "சந்தேகமேயில்லை... இப்பிள்ளை நிச்சயமாக அரசனாக வருவான். அவனைப் பாதுகாக்க வேண்டும்" என்ற முடிவிற்கு வந்தார். அதனால் தாதுசேனனை அழைத்துக் கொண்டுபோது தீகசந்தபிவெனாவில் தாதுசேனனை ஒரு பிக்குவாக தன்னுடன் வைத்துக் கொண்டார். அவனை சகல துறைகளிலும் விற்பன்னனாக மாற்றுவதென முடிவெடுத்தார். அவன் அங்கு வாழ்ந்து வந்தால் தமிழரால் ஆபத்து ஏற்படுமென நினைத்து, காலஓயாவிற்கு அப்பாலுள்ள ஒரு விகாரைக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். எனினும் ஒற்றர்கள் மூலம் இவை அனுராதபுர மன்னனுக்குத் தெரியவந்தன. உடனே தன் படைவீரரை அனுப்பி தாதுசேனனைப்பிடித்து வருமாறு கட்டளையிட்டான். அன்றிரவு பிக்கு வானவர் கனவு ஒன்றின் மூலம் நிகழவிருப்பதை அறிந்து கொண்டார். அதனால், தாதுசேனனையும் அழைத்துக்கொண்டு அதிதெற்கே கோணாநதிக்கு (காலஓயா) அப்பாலுள்ள ஒரு விகாரைக்குச் செல்ல முடிவெடுத்தார். கோணாநதியில் அவ்வேளை வெள்ளம் கரைமுட்டியிருந்தது. அதனைக் கடக்க முடியாமல் தவித்தபோது, பெரியதொரு சர்ப்பம் அவர்களைத் தனது முதுகில் இருத்தி அக்கரையில் சேர்த்தது. வெள்ளம் கரைபுரண்டோடும் அந்தக்கால ஓயாவில் பெரியதொரு நீர்ப்பாசனக் குளத்தை அமைப்பிக்க வேண்டுமென பிக்கு முடிவு செய்தார். தமிழ் மன்னன் பாண்டுவுக்கு எதிராகப் படை திரட்டுவதில் தாதுசேனன் ஈடுபட்டான். தாதுசேனனைக் கைப்பற்றுவதற்கு முன்னர் அவர்கள் உருகுணைக்குத் தப்பிச் சென்று விட்டனர்.



கலிங்க மன்னனின் மகள் ஹேமமாலா புத்தரின் புனித தந்தத்தை இலங்கைக்கு கொண்டுவந்த பொழுது


(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## வெப்பத்தோடு ஒளி வீசுகிற விளக்கு (Incandescent Lamp)

1870 களில் வீதியோரக் கம்பங்களில் வாயு விளக்குகள் **(Gas Light)** பயன்படுத்தப்பட்டன. அதற்கு முந்திய ஐந்து தசாப்த காலமாக மின்சார விளக்கு என்பது பலருக்கு கனவாகவும் அதனை உருவாக்க முனைந்த விஞ்ஞானிகளுக்கு பலத்த சவாலாகவும் இருந்து வந்தது. மின்வீச்சு விளக்கு **(Electric Arc Lighting)** தொடர்பான பலவித




*Vacuum (left) vs Gas-Filled (right)*

ஆய்வுகளில் 1878 ஆம் ஆண்டு விஞ்ஞானிகள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். 1878 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி ஏற்பட்ட சூரிய கிரகணத்தின் போது சூரியக் கதிர்ப்பினால் ஏற்பட்ட வெப்ப வேறுபாட்டை அளப்பதற்கு ஓர் கருவி தேவைப்பட்டது. இத் தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக எடிசனால் ஒரு கருவி ஆக்கப்பட்டது. காபனை **(Carbon Button)** பயன்படுத்தி நுண்ணுயர்மானி **(Microtasi meter)** எனும் கருவியை எடிசன் தயாரித்துக் கொடுத்தார். இக்கருவி மூலம் கடத்தி ஒன்றினூடான மின்னோட்டத்தை கட்டுப்படுத்தலாம். இம்முறையை பயன்படுத்தி மின்விளக்கு ஒன்றை உருவாக்க முடியுமா? என்றொரு கேள்வி எடிசனின் மனதில் அப்போது தோன்றியது.

எடிசன் மின்சார விளக்கு நிறுவனம் **(Edition Electric Light company)** எனும் நிறுவனமொன்றை உருவாக்கிய து.டீ.மார்கன் குழுவினர் எடிசனின் மின்விளக்கு ஆராய்ச்சிக்கு முற்பணமாக 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கினார்கள். பிரின்ஸ்ரன் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியான இருபத்தியாறு வயதுடைய பிரான்சிஸ் அப்டன் **(Francis Upton)** என்பவர் 1878 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் எடிசனின் ஆய்வுக் குழுவுடன் இணைந்து கொண்டார். **Francis Upton** மூலமாக எடிசன் அறிந்திராத பல கணித பௌதிகவியல் நுணுக்கங்களை எடிசனால் அறிந்து கொள்ள முடிந்தது.


ஆரம்பத்தில் உயர் தடையுடைய **(high Resistance)** உலோகக் கம்பியொன்றை மின்விளக்கிற்கு எடிசன் பயன்படுத்தினார். எடிசன் குழுவினர் வெற்றிடக் குமிழினுள்ள **(Vacuum Bulb)** பிளாற்றினம் கம்பிச்சுருளை **(Platinum Coil Filament)** பொருத்தி மின்னோட்டத்தை கட்டுப்படுத்தி வழங்கி பிளாற்றினச் சுருளை ஒளிரச் செய்து தமது முதல் மின்விளக்கை ஒளிர்த்தி காட்டினார். மின்வீச்சு விளக்குகளைதொடராக இணைக்கும் போது **(Series Connection)** அதிக மின்னோட்டம் காரணமாக ஒரு மின் விளக்கு பழுதுபட்டால் ஏனைய எல்லா மின்விளக்குகளும் அணைந்து விடும் என்பதை அறிந்த எடிசன் மின் விளக்குகளை சமாந்தரமாக இணைத்து **(Parallel Connection)** மின்னோட்டத்தை கட்டுப்படுத்தி வழங்கி மின்விளக்குகளை ஒளிரச் செய்து காட்டினார்.

பிரான்சிஸ் அப்டன் **(Francis Upton)**, தோமஸ் அல்வா எடிசன் **(Thomas alva Edison)** ஆகிய இருவரினதும் முயற்சியால் 1879 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மின் பிறப்பாக்கி **(Electric Generator)** கண்டு பிடிக்கப்பட்டது. மின் பிறப்பாக்கிக்கு பொறிமுறை சக்தியை **(Mechanical Energy)** வழங்கினால் அது மின் சக்தியை**(Electrical Energy)** பிறப்பிப்பதையும் மறுதலையாக




மின்சக்தியை வழங்கினால் அது பொறிமுறை சக்தியை உருவாக்கும் மின் மோட்டராக **(Electric Motor)** செயற்படுவதையும் எடிசன் செய்து காட்டினார்.

1881 ஆம் ஆண்டு **January** மாதம் வெப்பத்தோடு ஒளி வீசும் மின்வலு அமைப்பு **(Incandescent Electric Power System)** நியூயோர்க் மாநகரிலுள்ள கின்ந் ரு கெட்சம் **(Hind & Ketcham)** அச்சக மாளிகையில் ஸ்தாபிக்கப்பட்து. 1882 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மத்திய மின்சார நிறுவனம் **(Central Power System)** எனும் உலகின் முதல் வர்த்தக ஏற்பாடு எடிசனின் நேரடி மேற்பார்வையின் கீழ் நிறுவப்பட்டது. இவ் வர்த்தக நிறுவனம் மென் மேலும் வளர்ச்சியடைந்து மிகப் பெரிய உல்லாச விடுதிகள், அரங்க மேடைகள், வியாபார நிறுவனங்கள் யாவற்றிலும் மின் விளக்கின் பயன்பாடுஅதிகரித்ததன்விளைவாக எடிசனின் புகழ் உலகெங்கும் பரவியது.



Osram-GEC Drawn Tungsten 'Angle'

வெற்றிடக் குமிழை **(Vaccum Bulb)** கொண்ட மின்குமிழ் எரியும் போது சுருள் கம்பியின் நேர்முனையை **(Positive Pole)** சுற்றி நீல ஒளி **(Blue Glow)** காலுவது அவதானிக்கப்பட்டது. 1883 இல் இத் தோற்றப்பாடு எடிசன் விளைவு **(Edision Effect)** என அழைக்கப்பட்டது. பதினைந்து ஆண்டுகள் கழித்து 1898 ஆம் ஆண்டு ஜே.ஜே.தொம்சனால் **(J.J. thomson)** இலத்திரன் **(Electron)** கண்டு பிடிக்கப்பட்டதன் விளைவாக எடிசனின் விளைவுக்கு விளக்கம் கிடைத்தது. வெப்பக் கதிர் வீச்சாக **(Thermionic Emission)** சூடான முனையிலிருந்து குளிரான முனை க்கு **(Cold Electrode)** இலத் திரன்கள் செல்லும் போது நேர் முனைவில் நீலஒளி காலப்படுகி ன்றது. இத் தோற்றப்பாடு பின்னர் தொலைக் காட்சிப்பெட்டிகளில் பயன்படுத்தப்படும் இலத்திரன் குழாய் **(Electron Tube)** தோற்றம் பெறக் காரணமாக இருந்தது. அத்துடன் இலத்திரனியற்தொழிற்துறைக்கும் **(electronic Industry)** வழி வகுத்தது. ஜேர்மனியின் தலை நகரான பெர்லினில் **(Ber lin)** உள்ள **Osram Company** யில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட **sinte red tungsten wires** ஐக் கொண்டு செய்யப்பட்ட தங்குதன் இழை விளக்கை இங்கிலாந்தில் **(England)** உள்ள **GEC** எனும் நிறுவனம் தயாரித்தது. இவ் விளக்கு **Osram-GEC** Drawn Tungsten "Angle"என அழைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட எல்லா மின் விளக்குகளும் இலகுவில் உடை யமாட்டாத, இலகுவில் எரிந்து போகாத **sint ered tungsten filaments** ஆல் செய்யப்பட்டு வந்தன. இவ்வாறு தங்குதன் இழை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக உருவான மிகப்பெரிய மாற்றமாக விலை குறைந்த, இலகுவில் வடிவமைக்கக்கூடிய மின் விளக்குகள் சந்தைக்கு வரத் தொடங்கின. இவ் விளக்குகள் எரியும் நிலையிலுள்ள **(burning position)** தடைகள் **(restriction)** மேலும் குறைந்ததன் விளைவாக நுகர்வோரின் பாரிய அங்கீகாரம் இவ் விளக்கிற்கு கிடைத்தது. எல்லா கோணங்களிலும் விரும்பியவாறு இவ்விளக்கை பொருத்தி எரியச் செய்யலாம் என்பதால் "Angle" statement எனப்படும் மேற்படி கூற்று அதன் பொதியின் **(package)** மேல் குறிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டது.

சூரியனும் வெப்பத்தோடு ஒளிவீசுகின்ற ஒளிமுதலாக உள்ளது. அதன் மையப்பகுதியில் ஏற்படும் கருத்தாக்கங்களால் **(nuclear reactions)** வெப்பம் வெளிவருகின்றது. கருக்கள் ஒன்றுடன் ஒன்று இடைத் தாக்கமுற்று ஒன்று சேர்தல் கரு உருகல் **(nuclear fusion)** எனப்படும். இதன்போது அவைமிகப் பெருமளவு சக்தியை **(huge amounts of energy)** வெளிவிடுகின்றன. இச் சக்தி சூரியனின் மேற்பரப்பை அடையும் வரை அதன் மையப் பகுதியிலிருந்து அணுக்களினூடே கடத்தப் படுகிறது. இதனால் சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை ஏறக்குறைய 6000 $^{0}C$ (11000 $^{0}f$) ஆகின்றது. வெவ்வேறு நட்சத்திரங்கள் வெவ்வேறு மீடிறன்களில் **(different frequencies)** வெப்பத்தோடு ஒளியை வெளிவீசுகின்றன. அந்நட்சத்திரங்களின் நிறம் அவற்றின் திணிவிலும் அவற்றின் வயதிலும் தங்கியுள்ளது.

(தொடரும்...)

ஏ.குகன்
*BSc.(Cey),Dip in Ed.(Merit),Msc.in Phy oF Material, MATE (International)*
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 71

**'பிக் அப்பிள்' என அழைக்கப்படும் அமெரிக்க நகரம் எது?**

விடைகளை 17.09.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 70 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திரு. கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

### புதிர் 70 இற்கான கேள்வியும் விடையும்:

**நுண் கணிதத்தின் தந்தை எனப்படுபவர் யார்?**
**விடை:-Gottfried Wilhelm Leibniz**

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
### புதிர் இல. 71

சரியான விடை:-..........................................................................
முழுப்பெயர்:-..........................................................................
முகவரி:-..........................................................................
தொ.பே. இல:..........................................................................
கையொப்பம்:..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து

# இந்திய பாராளுமன்றில் கோசம்

## சபை அமர்வுகள் பாதிப்பு

(சென்னை)

**இந்திய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அ.தி.மு.க., தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த எம்.பிகள் இலங்கை ஜனாதிபதி இந்தியா வருவதற்கும் இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் எதிர்ப்பு தெரிவித்து கோசம் எழுப்பியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.**

இதன்போது எம்.பிகள் சிலர் பதாகைகளையும் ஏந்தி நின்றனர். காலையில் லோக்சபா ஆரம்பித்ததும் கேள்வி நேரம் பாதிப்புக்குள்ளானது. நிலக்கரி ஊழல் பிரச்சினைக்காக பா.ஜ.க. எம்.பிகள் ஒருபுறம் கூச்சலிட மற்றொரு பக்கம் தி.மு.க., அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளை சேர்ந்த தமிழக எம்.பிகள் இலங்கை விவகாரம் தொடர்பில் தங்கள் அதிருப்தியை வெளியிட்டனர்.

இதன்போது தி.மு.க. எம்.பிகள் வழக்கத்துக்கு மாறாக சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டனர். இதனிடையே விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்.பி. திருமாவளவனும் ஒரு பதாகையை பிடித்தபடி குரல் எழுப்பினார். சபாநாயகர் இருக்கையை அவர் முற்றுகையிட்டாலும் எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜை நோக்கியே அவர் கோசம் எழுப்பினார்.

இலங்கை சென்றிருந்த போது தன் தொகுதியான சாஞ்சிக்கு வரும்படி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சுஷ்மா அழைப்பு விடுத்திருந்தார் என்பதால் கொலைக் குற்றவாளியை வரவேற்கக்கூடாது என எழுதப்பட்ட பதாகையை சுஷ்மாவிடம் காட்டியபடி திருமாவளவன் கோசமிட்டார். எனினும் அதனை சுஷ்மா அவதானிக்காமலே இருந்தார்.

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க. எம்.பிகளும் இது தொடர்பில் வழக்கம்போல தங்கள் கண்டன கோசங்களை எழுப்பினர். இதனால் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 12 மணிக்கு கூடியது. அப்போது தி.மு.க. எம்.பிகள் அமைதி காத்தனர்.

ஆனால் அ.தி.மு.க. எம்.பிகள் தொடர்ந்து கோசம் எழுப்பியபடியே இருந்தார்கள். இதனிடையே ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (அ-2)

# 6 மில்லியனில் புதிய கட்டடம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நேற்று முன்தினம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரவெட்டிப் பிரதேச அமைப்பாளர் இராசதுரை செந்தில்நாதன் நாட்டி வைத்தார்.

பி.எஸ்.டி.சி. நிதியுதவியின் கீழ் 6 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை இன்று ஈ.பி.டி.பியின் கரவெட்டிப் பிரதேச அமைப்பாளர் நாட்டி வைத்தார். (அ-2)

# 3 மில்லியன் செலவில் விஞ்ஞான ஆய்வுகூடம்

(மல்லாவி)

வி.எஸ்.டி.ஜி (VSDG) திட்டத்தின் கீழ் தலா 3 மில்லியன் ரூபா செலவில் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மு/ஐயங்கன்குளம் அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் நன்மைகருதி இரண்டு ஆய்வுகூடங்கள் அமைக்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

போரினால் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் விஞ்ஞான பாடக்கல்வி வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்குடன் இது அமைக்கப் படவுள்ளது. மேற்படி பாடசாலைகளை தொடர்ந்து ஏனைய பாடசாலைகளிலும் ஆய்வுகூட ங்களை அந்நிறுவனம் அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-3-15)

## பாடசாலை அரச ஊழியர்கள்

# நிலுவை கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை

(றெட்பானா)

முல்லை.மாவட்ட பாடசாலை அரச ஊழியர்களின் நிலுவைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு கல்வித்திணைக்களம் முன்வர வேண்டும் என பாதிக்கப்பட்ட ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லை. மாவட்ட பாடசாலை ஆசிரியர்கள், சிற்றூழியர்களுக்கு தவறவிடப்பட்ட சம்பளத்தினை பல மாதங்கள் கடந்த நிலையிலும் அவற்றை வழங்குவதற்கு கல்வி திணைக்களம் முன்வரவில்லை என சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு தவறவிடப்பட்ட சம்பளத் தொகையே தொடர்ந்தும் நிலுவையில் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பான வடக்கு மாகாண ஆசிரியர் சங்க செயலாளருக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் இது வரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் எட்டப்படவில்லை.

எனவே, இவ்வாறு நிலுவையில் உள்ள சம்பளத் தொகையினை முழுமையாக பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-260)

# புதிய சேவை பிரமாண குறிப்புகளால் டிப்ளோமாதாரிகளுக்கு பாதிப்பு

## டிப்ளோமாதாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கத்துறை உத்தியோகத்தர்களுக்கான புதிய சேவை பிரமாண குறிப்புகள் தோற்றுவித்துள்ள குழப்பங்கள் காரணமாக புதிய நியமனங்களை பெற்ற பட்டதாரிகளும் டிப்ளோமாதாரிகளும் பெரும் பிரச்சினைக்கு ஆளாகியுள்ளனர் என அகில இலங்கை டிப்ளோமாதாரிகள் சங்கத்தின் தலைவர் என்.பி.எஸ். நிலங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னர் டிப்ளோமாதாரிகளும் பட்டதாரிகளும் சமமாக கருதப்பட்டனர். அப்போது டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் பெற்றுக் கொள்வது பிரச்சினையாக இருக்கவில்லை.

ஆனால் புதிதாக வெளியிடப்பட்ட பிரமாண குறிப்பு டிப்ளோமாதாரிகள் அரசாங்க நியமனம் பெறுவதில் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் அதிகாரிகளினால் பின்பற்றப்படுவதாக கூறப்படும் சுற்றறிக்கைகள் கற்பனையானவை. உண்மையில் அப்படியான சுற்றறிக்கைகள் இல்லை. இவ்வாறான சுற்றறிக்கை எதனையும் வெளியிடவில்லை என அமைச்சும் மறுத்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த கற்பனை சுற்றறிக்கையினால் உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் பட்டதாரிகளுக்கு சமமானவர்கள் அல்லவென கூறுகின்றது. இதனால் டிப்ளோமாதாரிகள் வேலையின்றி உள்ளனர்.

முன்னர் பட்டதாரி சேவை உத்தியோகத்தர்களுக்கென சேவை பிரமாண குறிப்பு இருக்கவில்லை. இதனால் பிரச்சினையும் இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் யாழ்.மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு வந்த பின்னர் எமது மேல் நடவடிக்கைகள் பற்றி சங்கம் தீர்மானிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# எலி போல பதுங்கவில்லை; புலி போல பாய்கிறேன்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(மூதூர்)

ஆயுத பாணிகள் அன்று செய்ததையே அதிகார தரப்பினர் இன்று செய்து வருகின்றனர் என நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மூதூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதி தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை திருக்கோணேஸ்வரம் கோயிலில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எலி போல் பதுங்கியிருப்பதாக என்னை பற்றி கூறும் சிலர் புலிபோல் வெற்றி நோக்கி பாய்ந்து செல்வதை கண்டு கதி கலங்கியுள்ளனர். இன்று சிறு தொழிலாளர்கள் தொட்டு செல்வந்தர்கள் வரை முஸ்லிம் காங்கிரசோடு ஒன்றிணைந்துள்ளனர்.

இவ்வேளையில் முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையில் ஓட்டை போடலாம் என்று சிறு சிறு கூட்டங்கள் சுற்றித்திரிகின்றன. மிக முக்கியமான கட்டத்தில் இவர்களது செயற்பாடு பாரதூரமான செயலாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் என்னும் இந்த பாரிய இயக்கத்தில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு சில குறுநில மன்னர்கள் செயற்படுகின்றனர். இவர்களது செயற்பாட்டிற்கு மக்கள் தகுந்த பதிலை தேர்தலில் கொடுப்பதற்கு காத்திருக்கின்றார்கள்.

முஸ்லிம்களது இருப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இத்தேர்தல் ஒரு வாய்ப்பாக அமைய போகின்றது. இதனால் இந்த தேர்தலில் அனைத்து முஸ்லிம்களதும் பங்குபற்றலை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

இது விடயத்தில் படித்தவர்கள் மற்றும் புத்திசாலிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாடாளுமன்றம் முடக்கம் !

# மன்மோகன் பதவி விலகுவாரா...?

இந்திய நாடாளுமன்றம் பிரதான பாரதிய ஜனதாகட்சியின் (பா.ஜ.க.) "நாடாளுமன்ற முடக்க" அறிவிப்பால் கடந்த 8 நாட்களாக முடக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் மன்மோகன் சிங் நிலக்கரித்துறை அமைச்சர் பொறுப்பை வகித்த காலத்தில் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதில் தனியாருக்கு 1.81 இலட்சம் கோடி ரூபாய் இலாபம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்ற *இந்திய தலைமை தணிக்கை அதிகாரியின் அறிக்கை (சி.ஏ.ஜி)* இந்திய அரசியலை புரட்டிப் போட்டிருக்கிறது. அரசின் வரவு செலவுகளை ஒடிட் (கணக்காய்வு) செய்யும் அரசியல் சட்ட அதிகாரம் பெற்ற அமைப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. "பிரதமர் பதவிக்குரிய கண்ணியம் காக்கவேண்டும் என்பதால் அமைதி காக்கிறேன். நான் அவர்களுடன் ஏட்டிக்குப்போட்டி பேசத் தயாராக இல்லை" என்று பிரதமர் அறிவித்திருப்பது இன்னும் பா.ஜ.க.வுக்கு எரிச்சலூட்டியிருக்கிறது. "பிரதமர் பதவிவிலக வேண்டும்" "நிலக்கரிச்சுரங்க ஒதுக்கீடுகளை இரத்து செய்ய வேண்டும்" "சுதந்திரமான ஒரு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" என்ற மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தி பா.ஜ.க. போர்க்கொடி உயர்த்தியிருக்கிறது. அதே சமயத்தில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியே இன்னும் பிரதமரை நேரடியாக ஆதரித்துப்பேசவில்லை. கம்யூனிஸ்டுக்கட்சிகள், முலாயம்சிங் ஜாதவ் போன்றோரும் பா.ஜ.க. வை ஆதரிக்கவில்லை. இப்படியொரு திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கிறது இந்திய நாடாளுமன்றத்தின் முடக்கம்.



**கோல்கேட்-1993 முதல் 2004 வரை**

கோல்கேட் பின்னணி என்ன? நிலக்கரிச் சுரங்கங்களை ஒதுக்கீடு செய்வதற்கு 1993 ஆம் ஆண்டிற்கு முன்புவரை சரியான கொள்கையேதும் மத்திய அரசிடம் இல்லை. ஆனால், 1993 இற்குப் பிறகு ஒருமுறை நடைமுறைக்கு வந்தது. அதன் படி ஸ்கீரினிங் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் தலைவராக மத்திய அரசில் உள்ள நிலக்கரித் துறை செயலாளர் இருப்பார். அவருக்குத் துணையாக நிலக்கரித்துறை சம்பந்தப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் எல்லாம் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் கமிட்டிதான் யார்யாருக்கு நிலக்கரிச் சுரங்கம் ஒதுக்கீடு செய்வது என்ற முடிவு எடுத்து அறிவிக்கும். தனியாருக்கு நிலக்கரிச் சுரங்கம் ஒதுக்கீடு செய்யவே இந்த வழி. பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றால் நில்கரித்துறை அமைச்சகமே நேரடியாக ஒதுக்கீடு செய்யலாம். ஸ்கீரினிங் கமிட்டி ரூட்டிற்கு வரவேண்டிய தேவையில்லை. இந்நிலையில் மத்திய அரசு ஒருகொள்கையை அறிவித்தது. அதுதான் 2012 ஆண்டிற்குள் அனைவருக்கும் மின்சாரம் என்ற கொள்கை. இதை அமுல்படுத்த ஸ்கீரினிங் கமிட்டி முறை சரிவராது எனக் கருதி இனி நிலக்கரிச் சுரங்க பிளாக்குகள் ஒதுக்கீடு செய்வது பொது ஏலத்தின் அடிப்படையிலேயே செய்யவேண்டும் என்று விரும்புகிறது மத்திய அரசு. இப்படி மத்திய அரசு நினைத்து ஓர் அறிவிப்பை வெளியிட்டது முதல் முறையாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு (2004-2009) பதவியிலிருந்த காலகட்டத்தில்தான் அதாவது 28.06.2004 அன்று அப்படியொரு அறிவிப்பை மத்தியஅரசு வெளியிட்டது. இது 2012 வரை அமுலுக்கு வரவில்லை. அதனால், தனியாருக்கு 1.81 இலட்சம் கோடி ரூபாய் இலாபம் சம்பாதிக்க ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதுதான் சி.ஏ.ஜி யின் அறிக்கை.



**கோல்கேட்-பிரதமர் அலுவலக எதிர்ப்பு**

சம்பந்தப்பட்ட நிலக்கரித்துறைச் செயலாளர் இந்த அரசு அறிவிப்பை கொள்கை முடிவாக அறிவிக்க நடவடிக்கை எடுத்தார். அதற்கான அலுவலக குறிப்பை 16.07.2004 ஆம் திகதி அனுப்பினார். இதுதான் கோல்கேட் போராட்டத்தின் ஆரம்பம். அந்த அலுவலகக் குறிப்பில், "நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் தனியாருக்கு குருட்டு அதிர்ஷ்டம் போல் கிடைக்கும் இலாபத்தை தடுக்க வேண்டும். அதற்கு பொது ஏலமுறையை உடனடியாக அமுலுக்கு கொண்டுவரவேண்டும்" என்கிறார். இந்த குறிப்பின் மீது எடுத்த எடுப்பில் "நிலக்கரிச் சுரங்கங்களை பொது ஏலம் விடுவதில் பல அசௌகரியங்கள் இருக்கிறது. இதை பரசீலிக்க வேண்டும்" என்று பி.எம்.ஓ.(பிரதமர் அலுவலகம்) அலுவலகத்தில் குறிப்பு எழுதினார்கள். அத்துடன் அக் கோப்பு நிலக்கரித்துறை இணையமைச்சருக்கு வருகிறது. அவரோ, "லேபர் யூனியன்களும், மற்றவர்களும் கடுமையாக எதிர்ப்பதால் 2000 ஆம் வருடத்தில் இராஜ்ய சபையில் ( இந்திய நாடாளுமன்றத்தின் மேலவை) தாக்கல் செய்யப்பட்ட நிலக்கரி சுரங்கங்கள் (தேசியமயமாக்கல்) திருத்த மசோதா, இன்னும் நிறைவேறாமல் கிடப்பில் கிடக்கிறது. ஸ்கீரினிங் கமிட்டி மூலம் ஒதுக்கீடு செய்வது வெளிப்படையான முறையல்ல என்பது மட்டுமே பொது ஏல முறைக்கு செல்வதற்கு ஒரே காரணமாக இருக்கமுடியாது" என்று குறிப்பு எழுதி 04.10.2004 அன்று முட்டுக்கட்டை போடுகிறார். இணையமைச்சரின் இக்குறிப்புப் பற்றி பிரதமர் அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடக்கிறது. அதன்படி இரு முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஒன்று தற்போதுள்ள ஸ்கீரினிங் கமிட்டி மூலமாகவே நிலக்கரி சுரங்க பிளாக்குகளை ஒதுக்கீடு செய்வது. அதற்கு கட்-ஆப் திகதியாக 28.06.2004 வைத்துக்கொள்வது என்பது ஒரு முடிவு. பொது ஏலம் பற்றிய கொள்கை முடிவை எடுத்து அதன் அடிப்படையில் 28.06.2004 இற்குப்பிறகு நிக்கரி சுரங்க பிளாக்குகள் ஒதுக்கீடு கேட்டுவந்த மனுக்கள் மீது முடிவு எடுப்பது என்பது இரண்டாவது முடிவு. இதற்கான "அமைச்சரவைக் குறிப்பும்" (கபினெட் நோட்) தயாரிக்கப்படுகிறது. இந்தக் கோப்பு சம்பந்தப்பட்ட நிலக்கரித்துறை அமைச்சருக்குப் போகிறது. அப்போது பிரதமரே அப்பொறுப்பை வைத்திருந்ததால் அவர்தான் துறை அமைச்சராகிறார். ஆனால், அவரோ "நிலக்கரித்துறை இணை அமைச்சர் 04.10.2004 அன்று எழுதிய கருத்தில் எனக்கு முழு உடன்பாடு உண்டு ஆகவே பொது ஏலம் விடுவது குறித்த தற்போதைய பிரேரணை குறித்து தொடர் நடவடிக்கை எடுக்கவேண்டிய தில்லை என்று கைவிரித்துவிட்டார்.

**கோல்கேட் இணையமைச்சரின் எதிர்ப்பு**

ஆனால், நிலக்கரித்துறைச் செயலாளர் விடவில்லை. மீண்டும் பொது ஏல முறை வேண்டும் என்று வற்புறுத்தினார். அதில் அவர் "ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள கட்-ஆப் (28.06.2004) இற்குள் வந்த மனுக்கள் எல்லாம் மார்ச் 25 இற்குள் முடிவு செய்யப்பட்டுவிடும். அதன் பிறகு நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு கேட்டு மனுக்கள் குவியத் தொடங்கும். அப்போது நமக்கு அவற்றைப் பரிசீலித்து முடிவெடுப்பது சிரமமாக இருக்கும். ஆகவே புதுக்கொள்கையை (பொது ஏலம் விடுவது) உடனடியாகக் கொண்டு வருவதே சிறந்தது" என்று கூறினார். மீண்டும் அதன்படி அமைச்சரவைக் குறிப்பை அபவிருத்தி செய்து அனுப்புங்கள் என்று பிரதமர் அலுவலகம் ஆணையிடுகிறது. இதற்கும் இணையமைச்சர் மறுத்துப்பேசினார். "பவர் யுடிலிட் டீஸ் இதை எதிர்க்கும். இந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பது சிரமம்" என்கிறார். அதைத் தொடர்ந்து மீண்டும் ஒரு கூட்டம் பிரதமர் அலுவலகத்தில் நடந்தது. அக்கூட்டத்தில் பொது ஏலக்கொள்கை மீண்டும் திசை மாறுகிறது. "நிலக்கரி சுரங்கங்கள் சட்டம் 1973ஐ திருத்துவதற்கு காலாவகாசம் தேவை. அதுவரை ஏற்கனவே உள்ள ஸ்கீரினிங் கமிட்டி முறையையே தொடரட்டும்" என்று 2005 ஜூலை 25 ஆம் திகதி கூறிவிட்டார். இந்த முடிவை அமுல்படுத்த அவசர நடவடிக்கை எடுங்கள் என்று பிரதமர் அலுவலகமே சம்பந்தப்பட்ட நிலக்கரித்துறை அமைச்சகத்திற்கு உத்தரவிட்டது. பொது ஏலம் என்ற கொள்கை முடிவை அமுல்படுத்த, ஒருவருட காலம் இப்படி உருண்டோடியது.

**கோல்கேட்- அமைச்சகத்தை எச்சரித்த பிரதமர்**

இந்நிலையில் 2006 பெப்ரவரி 07 ஆம்திகதி நிலக்கரித்துறைச் செயலாளர் இணையமைச்சர் மூலமாக தன் அமைச்சருக்கு ஒரு குறிப்பு அனுப்பினார். அதில் "கபினெற் நோட்டை விரைந்து தயாரிக்கும்படி பிரதமர் அலுவலகத்திலிருந்து அழுத்தம் கொடுக்கிறார்கள்" என்று கூறினார். ஆனால், அப்படிப்பட்ட குறிப்பை நிலக்கரித்துறை அமைச்சர் ஒரு மாதம் கழித்து அதாவது மார்ச் 07 ஆம் திகதி பார்க்கிறார்; அதன் பின்னர் மீண்டும் ஒருமுறை இறுதிக் குறிப்பு தயாரிக்கப்பட்டு அதை நிலக்கரித்துறைச் செயலாளர் ஒப்புதல் செய்து அமைச்சகச் செயலாளருக்கு அனுப்பிவைத்தார். உடனே பிரதமர் அலுவலகம் ஒரு கூட்டம் போடுகிறது. அதில் மீண்டும் விடயத்தை திசை திருப்புகிறார்கள். பொது ஏலமே வரக்கூடாது என்று திட்டமிட்டு செயற்படுவதுபோல் இந்த முயற்சி இருந்தது. அதாவது அக்கூட்டத்தில் மைன்ஸ் அன்ட் மினரல்ஸ் சட்டம் 1957 ஐத் திருத்தி அனைத்து மினரல்களையுமே பொது ஏலம் மூலமே அனுமதிசெய்ய வேண்டும் என்று முடிவு செய்வோம் என்று புத்தம் புதிய யோசனையை விதைத்திருக்கிறார்கள். இப்படி முடிவு எடுக்கப்பட்டது, 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 ஆம் திகதி. ஆனால் இதிலும் குறிக்குச்சால் ஓடினார் நிலக்கரித்துறை இணையமைச்சர். "இந்தச் சட்டத்தைத் திருத்தும் முடிவை மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்யவேண்டும். ஏனென்றால் மாநிலங்கள் இதை எதிர்க்கும். மத்திய-மாநில அரசு உறவில் இது பெரிய விவகாரமாகவே மாறிவிடும்" என்கிறார். அந்தக் குறிப்புடன் சென்ற கோப்பில் நிலக்கரித்துறை அமைச்சர் (பிரதமர் மன்மோகன்சிங்) "இணையமைச்சர் சொல்வது சரிதான் கூட்டாட்சித் தத்துவத்திற்கு பிரச்சினை ஏற்படுத்தும் ஆலோசனைகளை நிலக்கரித்துறை அமைச்சகம் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்" என்று எச்சரிக்கை விடும் பாணியில் குறிப்பு எழுதினார். நிலக்கரிச் சுரங்கங்களை பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய, மூன்றாவதாக எடுக்கப்பட்ட முயற்சியும் முறியடிக்கப்பட்டது. இந்த முடிபு 27.04.2006 அன்று எடுக்கப்பட்டது...

# நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் தகராறு

நன்றி: இணையம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை அழிக்க ஆயுதம் வழங்கிய இந்தியாவும் ஒரு கூட்டுக் குற்றவாளியே

## மன்மோகனுக்கு வைகோ கடிதம்

(கொழும்பு)

**புத்த பெருமானின் புனித சின்னங்களை இலங்கைக்கு அனுப்புவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமரை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கேட்டுக் கொண்டுள்ளார்.**

இது தொடர்பாக அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அவர் நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அக்கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளவை வருமாறு,

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களை வேதனைக்கு உள்ளாக்குகின்ற ஒரு செய்தியைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விளைகின்றேன்.

டில்லியில் உள்ள தேசிய ஆவணக் காப்பகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள புத்த பெருமானின் எலும்புகள் உள்ளிட்ட புனித சின்னங்களை கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரையிலும் இலங்கை முழுவதும் காட்சிப் பொருளாக வைப்பதற்காகக் கொண்டு செல்வது என இந்திய அரசும் இலங்கை அரசும் ஒப்பந்தம் செய்து கொண்டு இருப்பதாக ஏடுகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளை ஏற்று இந்திய அரசும் இம்முடிவை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இந்திய அரசின் இந்த முடிவு வெந்துபோன தமிழர்களின் நெஞ்சில் வேல் கொண்டு குத்துவதாக இருக்கின்றது.

மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைப் படுகொலை செய்தது இலங்கை இனவாத அரசு. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட மூவர் குழு அளித்த அறிக்கை அதை உறுதிப்படுத்துகின்றது.

இப்போது உலக நாடுகளின் மனச்சாட்சி விழித்துக் கொள்ளத் தொடங்கி இருக்கின்றது.

ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கு இந்திய அரசு முனைப்போடு முன்னின்று பணியாற்றியது. இலங்கைஅரசுசெய்த இனப்படுகொலைகளைமறைத்து அவர்களைப் பாதுகாக்க முயன்றது.

எனவே ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்திட இலங்கைக்கு ஆயுதங்கள் இராணுவ உதவிகளை வழங்கிய இந்தியாவும் ஒரு கூட்டுக் குற்றவாளியே என்பதை நான் மிகுந்த வேதனையோடு குறிப்பிடுகின்றேன்.

தற்போது இலங்கையில் தமிழர்களின் இந்து சமய வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் பௌத்த விகாரைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இலங்கைத் தீவு முழுதையுமே ஒரு பௌத்த சிங்கள நாடாக மாற்றுவதற்கு இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவுதினமான மே 18 ஆம் திகதியன்று இந்தியா இப்படி ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது.

இந்திய அரசு தமிழர்களுக்கு இழைக்கின்ற மன்னிக்க முடியாத துரோகம் இது.

டில்லி தேசிய ஆவணக் காப்பகத்தில் உள்ள புத்த பெருமானின் புனித சின்னங்கள் இன்றைக்கு உலகின் மிகவும் மதிக்கத்தக்க பழைமையான பொருள்களுள் ஒன்றாகும். இவை 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடத்திய அகழ்வு ஆராய்ச்சிகளின் போது இந்தச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன.

அந்த பிப்ரவாதான் பண்டைக்காலத்தில் கபிலவஸ்து என்று அழைக்கப்பட்டது. புத்தர் இயற்கை எய்திய போது அவரது சாம்பலும் எலும்புத் துண்டுகளும் எட்டுக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டு எண் திசையைச் சார்ந்த எட்டுக் குழுக்களிடம் பாதுகாப்பதற்காகக் கொடுத்து வைக்கப்பட்டது. புனிதம் நிறைந்த சின்னங்களை இலங்கைக்கு கொண்டு செல்லக் கூடாது.எனவே, புத்த பெருமானின் புனித சின்னங்களை இலங்கைக்குக் அனுப்புவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய தாங்கள் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## முத்தமிழ்விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் தேசியப் பாடசாலையின் முத்தமிழ்விழாவும் கலைத்தளிர் சஞ்சிகை வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து.இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

## மறுவிவாகம் செய்த பெண்ணுக்கு சிறை

(கொழும்பு)

முதல் திருமணத்திலிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொள்ளாமல் மீண்டும் ஒரு மறுவிவாகம் செய்து கொண்ட பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாதச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கொம்பனித் தெருவைச் சேர்ந்த 19 வயதுடைய பெண்ணே இவ்வாறு இரண்டாம் விவாகமொன்றைச் செய்திருந்தார்.

இது தொடர்பாக முதற் கணவரின் தாயார் (மாமியார்) செய்த முறைப்பாட்டை விசாரணை செய்த கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரத்ன 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த 6 மாத சிறைத் தண்டனையை விதித்தார். (அ-2)

## கடந்த நான்கு ஆண்டுகளில் 21 ஆயிரம் துஷ்பிரயோகங்கள்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த 4 ஆண்டுகளில் 21 ஆயிரத்து 458 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்களும் சிறுவர், சிறுமியரும் இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளனர். நாட்டின் சட்ட ஒழுங்கு நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்த போதிலும் அந்த வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

இந்த ஆண்டில் மட்டும் ஆயிரத்து 700 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கடந்த ஓராண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 600 சிறுவர், சிறுமியர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் எவ்வித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

## பயண எச்சரிக்கையில் மாற்றமில்லை; அமைச்சர் நியோமல் பெரேரா அறிவிப்பு

இலங்கையர்கள் தமிழ்நாட்டுக்கு செல்வது தொடர்பான பயண எச்சரிக்கையில் மாற்றமில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டுக்கு இலங்கைப் பிரஜைகள் செல்வது ஆபத்தானது என அண்மையில் வெளிவிவகார அமைச்சு பயண எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த பயண எச்சரிக்கையை தற்போதைக்கு தளர்த்தப் போவதில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப் பயண எச்சரிக்கையை தடை உத்தரவாக கருதப்பட முடியாது. மக்களை விழிப்படையச் செய்யும் வகையிலான ஓர் பயண எச்சரிக்கை மட்டுமே இது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



கிளாலி புனித கண்மணி மாதா ஆலயமானது கடந்த கால போர் சூழலில் சேதமடைந்து 15 வருடங்களின் பின்னர் திருத்த வேலைகள் இடம்பெற்று கடந்த முதலாம் திகதி திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய திருப்பலியின் போது சிறார்களுக்கு முதல்நன்மை அருட்சாதனம் பங்குத்தந்தையால் வழங்கப்பட்டது. இதன்போது முதல்நன்மை பெற்ற சிறார்களுடன் அருட்தந்தையர்கள் மற்றும் மறையாசிரியர் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## நாளொன்றுக்கு 11 பேர் வரை தற்கொலை செய்கின்றனர்

### சுகாதார அமைச்சின் மனநலப் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாளொன்றுக்கு பதினொரு பேர் தற்கொலை செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வருடத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு தற்கொலை செய்து கொள்வதாக சுகாதார அமைச்சின் மனநலப் பிரிவு குறிப்பிடுகின்றது.

அநேகமானவர்கள் கிருமி நாசினிகளை உட்கொண்டு இவ்வாறு உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். 20 முதல் 45 வயது வரையிலானவர்கள் அதிகளவில் தற்கொலை செய்து கொள்வதாகவும் இந்த தற்கொலைகளை தடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் தற்கொலைச் சம்பவங்களை தடுக்க முடியும் என சுகாதார அமைச்சின் மனநலப் பிரிவுப் பணிப்பாளர் பிரசந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களை அச்சுறுத்தும் நோக்கில் நஞ்சு அருந்தும் பலர் உயிரிழந்து விடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மன அழுத்தம், மன உளைச்சலிலிருந்து விடுபடுவது தொடர்பில் நாட்டு மக்களுக்கு போதியளவு விளக்கம் அளிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொக்கும் நண்டும்

அது ஒரு சிறிய குளம். அந்தக்குளத்தின் அருகே கொக்கு ஒன்று வசித்து வந்தது.

அந்தக்கொக்கு குளத்திலுள்ள மீன்களைப் பிடித்துச் சாப்பிட்டு உயிர்வாழ்ந்து கொண்டிருந்தது.

நாளாக நாளாக கொக்கிற்கு வயதாக ஆரம்பித்தது. அதனால் முன்பு போல அவ்வளவு சுலபத்தில் பிடித்துச் சாப்பிடமுடியவில்லை. இதன்காரணமாக சில சமயங்களில் அது பட்டினி கிடக்க நேர்ந்தது.

இந்தப்பிரச்சினையைப் போக்க என்னசெய்யலாம் என யோசிக்க ஆரம்பித்தது. ஒரு திட்டமும் வகுத்தது.

அந்தக்குளத்தில் மீன்கள் மட்டுமில்லாது நண்டுகளும் தவளைகளும் வசித்து வந்தன.

ஒருநாள் காலை அந்தக் குளத்தின் அருகே கொக்கு கவலையுடன் நின்று கொண்டிருந்தது.

இதைக்கவனித்த நண்டு அதன் அருகே சென் றது.

"கொக்குமாமா கொக்கு மாமா எதுக்காக கவலையோட நின்னுக்கிட்டிருக்கே உடம்பு சரியில்லையா?"

"உடம்பெல்லாம் நல்லா தான் இருக்கு. அந்த விஷய த்தைக் கேள்விப்பட்டதிலிருந்து மனசுதான் சரியில்லே"

"அப்படி என்ன விஷயத்தைக் கேள்விப்பட்டே கொக்குமாமா"

"இந்தக்குளம் இருக்கில்லே. இதை மண்ணைப் போட்டு மூடிட்டு இதுலே செடியெல்லாம் வெக்கப் போறாங்களாம்.

உனக்கும் எனக்கும் எந்தப் பிரச்சினையுமில்லே. இந்தக் குளத்தில இருக்கிற மீன் தம்பிகளை நினைச்சா தான் எனக்கு வருத்தமா இருக்கு"

இந்தப்பேச்சுக்களை குளத்திற்குள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த மீன்கள் வருத்தப்பட்டன.

அவை உடனே கூட்டமாய் குளக்கரைக்கு வந்தன.

கொக்கு அண்ணா, கொக்கு அண்ணா, நீ நண்டுகிட்டே சொன்னதை நாங்க கேட்டோம். எங்களை நீதான் எப்படியாவது காப்பாத்தணும்"



கொக்கு யோசிப்பது போல் நடித்தது.

"இங்கேயிருந்து ரொம்ப தொலைவிலே ஒரு பெரிய குளம் இருக்கு. அந்தக் குளத்தை யார் நெனைச்சாலும் மண்ணைப்போட்டு அவ் வளவு சுலபத்திலே மூடமுடியாது.

நான் நினைச்சா உங்களை யெல்லாம் அந்தக்குளத்துலே கொண்டு கோய் விட்டுடலாம். இது ஒண்ணுதான் நல்ல வழியா எனக்குத் தோணுது"

"அண்ணா, தயவு செஞ்சி எங்களை எப்படியாவது காப் பாத்துண்ணா"

மீன்கள் கொக்கிடம் கெஞ்சின.

"நீங்க அவசரப்படக் கூடாது. ஒரு தடவைக்கு ரெண்டு பேர்களைத்தான் என்னால கொண்டு போக முடியும்.

எனக்கும் வயசாயிடுச்சில்லியா?"

மீன்கள் இதற்குச் சம்மதித்தன.

கொக்கு தனது அலகால் இரண்டு மீன்களை எடுத்துக் கொண்டு பறந்தது. ஆனால், சொன்னபடி மீன்களை வேறொரு குளத்திற்குக் கொண்டு செல்லவில்லை. ஒரு பாறை மீது அவைகளை வைத்து சாப்பிட்டது. இப்படியே ஒவ்வொரு முறையும் பசிக்கும் போது கொக்கு குளத்திலிருந்து மீன்களைப் பிடித்துச் சென்று சாப்பிட்டது.

இப்படியே எல்லா மீன்களையும் அந்தக் கொக்குச் சாப்பிட்டுவிட்டது. கடைசியாக நண்டு மட்டும் மிஞ்சியது.

நண்டும் அந்தக்குளத்தை விட்டுப் புதிய குளத்திற்குச் செல்ல ஆசைப்பட்டது.

"கொக்குமாமா, கொக்கு மாமா, என்னையும் அந்தக் குளத்துக்கு நீ கொண்டு போய் விட்டுடேன்"

கொக்கிற்கு ரொம்ப நாளாக நண்டைச் சாப்பிட வேண்டுமென்று ஆசை. எனவே, கொக்கு நண்டை தூக்கிச் செல்லச் சம்மதித்தது.

கொக்கு தன்னைத் தூக்கிச் செல்கிறேன் என்று சொன்னது நண்டிற்கு மகிழ்ச்சியளித்தது.

அது கொக்கின் முதுகில் அமர்ந்துகொண்டு கொக் கின் கழுத்தைப் பிடித்துக் கொள்ள கொக்கு பறக்க ஆரம்பித்தது. சிறிதுநேரம் பறந்ததும் நண்டு கொக்கிடம் பேச ஆரம்பித்தது.

"கொக்குமாமா, ரொம்ப நேரமா பறக்கறீங்க. குளத்தையே காணோமே"

இதைக்கேட்ட கொக்கு சிரித்தது.

அந்தப்பாறைப்பகுதி வந்ததும் கொக்கு கீழே இறங்க ஆயத்தமானது.

"நண்டு தம்பி,கீழே பாரு தம்பி"

நண்டு கீழே பார்த்தது. நிறைய மீன்முட்கள் காணப்பட்டன.


"நான் சொன்ன தெல்லாம் பொய். மீன்களை இங்கே கொண்டு வந்து சாப்பிட்டுட்டேன். உன்னையும் இப்ப சாப்பிடப் போறேன்"

இதைக்கேட்ட நண்டு கோபமடைந்தது. உடனே அது கொக்கின் கழுத்தைப் பிடித்து தன் கொடுக்கால் நெரிக்க ஆரம்பித்தது.

கொக்கு கெஞ்சியது. ஆனால், தன்னையும் மீன்களையும் ஏமாற்றிய கொக்கை அது மன்னிக்க விரும்பாமல் கழுத்தை நெரித்து சாகடித்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன்?



(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன, பல்கலைக்கழக அமைப்புகள் சீரழிக்கப்படுகின்றன ஏன்? இன்னும் மௌனம் என்ற கோசத்துடன் நேற்றையதினம் யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று மதியம் 12 மணிமுதல் ஒரு மணிவரை நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இடம்பெற்றதோடு யாழ்.பல்கலைக்கழகத்திலும் இடம்பெற்றது.

3 மாதத்திற்கும் மேலாக இவ் ஆர்ப்பாட்டம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினாலும் ஊழியர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3 மாதகால்மாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்ற போதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ, அரசோ எவ்வித நடவடிக்கையும் மாணவர்களின் கல்விக்காக எடுக்கவில்லை.

இவற்றினை கண்டித்தும் பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை நடத்துவதற்கு அரசு உரிய தீர்வினை எடுக்க வேண்டும் என்றே நேற்றைய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரே வெளியேறு! விரிவுரையாளர்கள் வீதியில், ஊழியர்கள் வீதியில், மாணவர்களும் வீதியில் பல்கலைக்கழகங்களோ இருட்டில். அதிகாரிகள் தடை போட்டாலும் நாம் நம் பாதையில் செல்வோம். ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஊதியப் பிரச்சினை. மாணவர்களுக்கோ பெரும் பிரச்சினை. நிர்வாகமோ ஆழ்ந்த நித்திரை என்ற வாசகங்கள் அடங்கிய

## நாடளாவிய ரீதியில் கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்

பதாகைகளை ஏந்தியவாறும் கோசமிட்டவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் அனைத்து தொழிற்சங்க கூட்டுக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றதோடு இதனை யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் யாழ்.பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் யாழ்.பல்கலைக்கழக வாயிலில் இடம்பெற்றவேளை பல்கலைக்கழக வெளிப்புறச் சூழலில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததோடு புலனாய்வாளர்களும் நின்றனர். எனினும் பொலிஸார் குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேராவும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## நாட்டின் சகல கைதிகளும் சட்டத்திற்கு அமைவாக நடத்தப்பட வேண்டும்

### கத்தோலிக்க பேராயர் பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டின் சகல கைதிகளும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடத்தப்பட வேண்டுமென இலங்கை கத்தோலிக்க பேராயர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் பொலிஸார் நடத்திய தாக்குதல்களில் சில கைதிகள் கொல்லப்பட்டதுடன் காயமடைந்ததாக குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் கத்தோலிக்க பேராயர்கள் பேரவை தெரிவித்துள்ளது.

பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடு எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும். கைதிகள் சர்வதேச சட்டங்களுக்கு அமைவான முறையில் நடத்தப்பட வேண்டும்.

அனைத்து கைதிகளும் சுயகௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதே சர்வதேச சட்டம் இவ்வாறான சம்பவங்கள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது அவசியம்.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடியாக தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும். பரீட்சை தொடர்பில் பல்வேறு சர்ச்கைள் எழுந்துள்ளதாகவும் பிரச்சினைக்கு தீர்வுகள் வழங்கப்பட வேண்டியது அவசியம்.

பல்கலைக்கழகங்கள் சில காலம் மூடப்பட்டுள்ளதாகவும் இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது தொடர்பிலும் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென கத்தோலிக்க பேராயர் பேரவை மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

## யாழ். மாநாடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடும் அங்கஜன் இராமநாதன் பிரதம அமைப்பாளராகப் பதவியேற்று இரு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்ட நிகழ்வும் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்படுவதாக யாழ். மாவட்ட அமைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## நெடுந்தீவு பிரதேச சபையினால் கிணறுகள் துப்புரவாக்கல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுக் கிணறுகள் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தலைமையில் இறைத்து துப்புரவாக்கும் பணி நடைபெற்றது.

இதன்போது நெடுந்தீவு பிரதேச சபைக்குட்பட்ட நெடுந்தீவு முருகன் கோவிலுக்கு பின்னால் உள்ள பொதுக் கிணறும் சிறீஸ்கந்தா வித்தியாலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள பொதுக் கிணறும் குடாக் கேணிக்கு அருகாமையிலுள்ள பொதுக் கிணறும் பூமுனையில் அமைந்துள்ள் பொதுக் கிணறும் இறைத்து துப்புரவு செய்யப்பட்டன.

இத் துப்புரவாக்கும் பணியில் நெடுந்தீவு பிரதேச சபை ஊழியர்கள் கலந்து கொண்டனர். (அ-9)


உயர்தர பரீட்சைகளின் பின் கொம்ப்யூட்டர் படிக்க சிறந்த வாய்ப்பு

Mega ஸ்கொலர்ஷிப்

You can Win Upto 75%

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்

இம்முறை உயர்தர பரீட்சை எழுதிய மாணவ மாணவியருக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களுக்கான தொழில்சார் பயிற்சி சீஎஸ்சீ - ஏசியனிடமிருந்து மட்டுமே.

இலவச பரீட்சை மாதிரி வினாத்தாளையும் (Model Paper) அனுமதிகளையும் எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்

ஸ்கொலர்ஷிப் பரீட்சை

September 2012

| Mo | Tu | We | Th | Fr | Sa | Su |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

செப்டெம்பர் 9th ஞாயிறு

CSC - ASIAN COMPUTER EDUCATION

இலவச பரீட்சை அனுமதிகளை எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(சு/903)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677 |
| நல்லூர் | 9, குமார வீதி, 021-2229191 |
| நெல்லியடி | கொடிகாமம் வீதி, 021-2262399 |
| சாவகச்சேரி | கட்டுக்காணி வீதி, 021-2270267 |
| கிளிநொச்சி | A9 வீதி, ஆனந்தபுரம், 021-2283925 |



யாழ் மண்ணில்....



கல்யாணமாலை

KALYANAMALAI

(சர்வதேச இலவச திருமண சேவை)



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)

எனும் முகவரியில் இயங்குகின்றது

தொடர்பு:- 021 720 1005

பதிவுக்கட்டணம் ரூ.1000/-

குறிப்பு:- பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம். மட்டுமே திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

E-mail:-kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்திற்கு காணி வழங்குவது குறித்து மக்களே தீர்மானிக்க வேண்டும்

## சில்வேஸ்திரி அலென்ரின் எம்.பி. திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் விருப்பத்தினை கேட்டறிந்த பின்பே இராணுவத்தினர் கோரும் காணிகளை கொடுப்பதா? இல்லையா? எனத் தீர்மானிக்கப்படும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கு காணிகளை வழங்குவதற்கு எமக்கு விருப்பம் இல்லை. இருந்தும் அரச காணிகளையே இராணுவத்தினர் கோருகின்றனர்.

இதனால் அப்பகுதி மக்களின் விருப்பத்தினை கேட்டறிந்த பின்பு அவற்றை வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

அரச காணிகள் என்பதற்காக அப்பகுதி மக்களின் விருப்பத்தினை அறியாது கொடுக்க முடியாது.

அரச திணைக்களங்கள் அப்பகுதியில் வருவதை பொதுமக்கள் விரும்பினாலும் இராணுவமுகாம்கள் வருவதை விரும்பமாட்டார்கள்.

இருப்பினும் இராணுவத்தினர் தமக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ள காணிகளை அவர்களுக்கு வழங்க வேண்டாம் என எவரும் ஆட்சேபிக்கவில்லை.

மேலும் பொதுமக்களின் காணிகள் வீடுகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேறுமாறு வேண்டுகோள் விடுக்கும் போது அரச காணிகளைத் தருமாறு பிரதேச செயலர்கள் ஊடாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அவ்வாறு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுள்ள நான்கு காணிகளைத் தமக்குத் தருமாறு இராணுவத்தினர் கோரியுள்ளனர்.

இருப்பினும் மக்களின் விருப்பத்தினை கேட்டறிந்த பின்பே அதற்கான அனுமதிப் பத்திரத்தில் நான் கையொப்பம் இடுவேன் என்றார் அவர். (அ-6)

# சித்திரப்போட்டி

(பூந்தோட்டம்)

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாணவர்களுக்கான சித்திரப் போட்டி நாளை சனிக்கிழமை வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களைப் பங்குபற்றுமாறும் இத்தினத்தில் நடைபெறவிருந்த விவாதப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாகவும் வுவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார். (அ-266)

# பணம் கோரும் வீதி சிறுவர்கள் மீது உரியவர்கள் கவனமெடுக்க வேண்டும்

(றெட்பானா)

யாழ்ப்பாணம்,வவுனியா போன்ற மத்திய பேருந்து நிலையங்களில் பாடசாலையை விட்டு இடைவிலகிய சிறுவர்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

இவ்வாறு காணப்படுகின்ற சிறுவர்கள் கைகளில் போட்டோ பிரதி செய்யப்பட்ட பல துண்டுப் பிரசுரங்களுடன் அவ்விடத்தில் நிற்கின்றனர்.


அவ்விடங்களில் காணப்படுகின்ற பயணிகளிடம் அவற்றைக் காட்டி சிறுதொகைப் பணத்தினை பெற்றுக் கொள்கின்றார்கள்.

தாய், தந்தை இல்லை, படிப்பதற்கு வசதி இல்லை என இச்சிறுவர்கள் காரணம் கூறுகின்றனர்.

இவர்கள் வைத்துள்ள துண்டுப் பிரசுரங்களும் உரிய காரணத்துடன் கிராம சேவகர் அல்லது அரச ஊழியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டமையாக உள்ளது.

எனவே, இங்குள்ள சிறுவர் அமைப்புக்கள் இவ்வாறான சிறுவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவ முன்வர வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (அ-3-260)

# பழுதான மின் இணைப்பை விண்ணில் சரிசெய்தார் சுனிதா



சர்வதேச விண்வெளி நிலையத்தை பராமரிக்க விண்வெளியில் தங்கியுள்ள நாசா குழுவினர் பழுதடைந்த மின் இணைப்பை வெற்றிகரமாக சரி செய்தனர்.

6 பேர் கொண்ட இக்குழுவில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அகிஹொஷிடே ஆகிய இருவரும் விண்வெளி ஓடத்திற்கு வெளியே வந்து அப்பணியை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

கடந்த முறை 8 மணிநேரம் விண்வெளியில் மிதந்தவாறு செய்த பணிகள் வெற்றிகரமாக அமையவில்லை.

அதனால் இரண்டாவது முறையாக இப்போது 6.30 மணிநேரம் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அகி ஹொஷிடே ஆகிய இருவரும் விண்வெளியில் மிதந்து நடந்து மெயின் பேருந்து சுவிட்சை வெற்றிகரமாக நிறுவினர் என நாசா அறிவித்துள்ளது.

இதற்கு முன்பு பெக்கி வொயிட்சன் என்ற விஞ்ஞானிதான் அதிகபட்சமாக 39 மணி நேரம் 46 நிமிடங்கள் விண்ணில் நடந்து பராமரிப்பு பணிகளை மேற்கொண்டிருந்தார்.

இந்திய வம்சாவழியை சேர்ந்த ஒரு பெண்ணான சுனிதா வில்லியம்ஸ் ஆறு முறை விண்ணில் நடந்து அதிகபட்சமாக 44 மணிநேரம் 2 நிமிடங்கள் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு அவரை மிஞ்சியுள்ளார் என்று நாசா அறிவித்துள்ளது. (அ-9)

# மட்டு.சித்தாண்டியில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு சித்தாண்டி விநாயக கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சித்தாண்டி விநாயக கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி கணேசமூர்த்தி (வயது 47) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி புகையிரதம் இவர் மீது மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கூலி வேலைக்குச் சென்று வீடு திரும்பிய இவர் கடைக்குச் சென்று கொண்டிருந்த போது புகையிரதப் பாதையைக் கடக்க முற்பட்ட வேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (அ-9)

# தமிழகத்தின் கொந்தளிப்பிற்கு புலி ஆதரவாளர்களே பின்னணி

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

இலங்கைக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் செயற்பட்டிருக்கலாம் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்நாட்டில் இடம்பெற்று வரும் இலங்கை எதிர்ப்பு போராட்டங்களின் பின்னணியில் எஞ்சியுள்ள விடுதலைப்புலிகள் இயங்கியிருக்கக்கூடும்.

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பயண எச்சரிக்கையை வாபஸ் பெற்றுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

இதேவேளை, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி, மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌஹானுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (அ-2)

மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி

விவேகானந்தன் நவயுகன்

எமது பாடசாலையின் நலன் விரும்பிகள் கனடா
வாழ் நல்லை மாந்தரின் அங்கத்தவர்கள்
விவேகானந்தன்– வரதவாணி
தம்பதியினரின் ஏகபுதல்வன்
நவயுகன் அவர்களின்
அகாலப் பிரிவு கேட்டு அதிர்கிறாள் மங்கையர்கரசி
நல்லை முருகனின் அழைப்பையேற்றுச் சென்ற
இளவல்– இளவள்ளல் நவயுகனின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்



(சி-976)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாடு ஒன்றை முன்புறத்திலிருந்து நெருங்கக் கூடாது. குதிரையொன்றை பின்புறத்திலிருந்து நெருங்கக் கூடாது. முட்டாளை எந்தத்திசையிலிருந் தும் நெருங்கக் கூடாது.
~ ஹென்றி போர்ட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆசியாவின் ஆச்சரியம்!

யமதர்மராஜன் வருகிறார்... யமதர்மராஜன் வருகிறார்... பராக்... பராக்... யமதர்மராஜன் தலைமையிலான குழுவினர் வடக்குமாகாணக் கல்வி அமைச்சு அமைந்துள்ளயாழ்ப்பாணக்கல்விவலய வளாக நுழைவாயிலுக்குச் செல்கின்றனர்.

அச்சமயம் அங்கிருந்து வந்த வாகனமும் யமதர்மராஜன் சென்ற வாகனமும் மோதிக் கொள் வதிலிருந்து மயிரிழையில் தப்பித்துக் கொள்கின்றன.

யமன் : சித்திரகுத்தா! இஃதென்ன அபத்தம். தேவாலய மதில் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக நுழைவாயிலை மறைத்துக் கொள்கிறது. இதனால் விபத்து ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமல்லவா?

சித்திர : சுவாமி இப்போதெல்லாம் வடமாகாணத்திலிருந்து மூன்று விசாக்கள் மூலமே எங்கள் லோகத்திற்கு ஆட்களை எடுத்துக்கொள்கின்றோம். அதில் ஒன்று விபத்து. மற்றையது தற்கொலை. மூன்றாவது புற்றுநோய் இம் மூன்றிலும் விபத்து மூலம் தான் எங்கள் லோகத்திற்கு இங்குள்ளவர்கள் அதிகம் வருகிறார்கள். எனவே இது பற்றி எதுவும் இங்கு கூறிவிடாதீர்கள். பின்னர் விபத்துக் குறைந்து விடும்.

இவ்வாறு கூறிக்கொள்ளும் போது, வாகனம் யாழ். கல்வி வலய முன்றலில் நிறுத்தப்படுகிறது.

யமன் : இதென்ன ஆச்சரியம்! பல வருடங்களுக்கு முன்னர் இருந்த ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் அதே கட்டிடம். யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு ஒரு புதிய கட்டிடத்தை கட்டிக் கொடுக்க இலங்கை அரசால் முடியவில்லையா? திருத்தப்படாத பழம் கட்டிடம்தான் ஆசியாவின் ஆச்சரியமா? அபத்தம்... அபத்தம்...

சித்திர : சுவாமி அதோ வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம். யமதர்மராஜன் வரும் செய்தி அமைச்சுக்கு அறிவிக்கப்படுகிறது.

மாநாட்டு மண்டபத்தில் அமைச்சரின் அதிகாரிகளுடன்யமதர்மராஜன் குழுவினர் சந்திக்கின்றனர்.

யமன் : நல்லாசிரியர்களுக்கு, நல்ல அதிபர்களுக்கு நீங்கள் கொடுக்கும் வெகுமதி.

அதிகாரிகள் : ஜனாதிபதியால் வழங்கப்படும் பிரதீபா பிரபா விருது வழங்குகிறோம்.

யமன் : அந்தவிருதை தெரிவு செய்வது யார்?

அதிகாரிகள் : கல்வி அதிகாரிகள்.

யமன் : விருது பெற்ற ஒரு ஆசிரியரை அல்லது ஒரு அதிபரை குற்றஞ்சாட்டுவதாக இருந்தால், அக்குற்றச்சாட்டு விருதுக்கு முன்பானதாக இருக்க முடியுமா?

அதிகாரிகள் : (விழிக்கின்றனர்)

சித்திர : சட்ட நுணுக்கமாக யமதர்மராஜன் தங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்.

அதிகாரிகள் : (மௌனம்)

யமன் : ஒரு ஆசிரியருக்கு அவப் பெயரை ஏற்படுத்துவதாக இருந்தால்...

அதிகாரிகள் : அவரை அதிபராக்க வேண்டும்.

யமன் : எதற்கும் விதண்டாவாதம் பேசும் ஆசிரியரை...

அதிகாரிகள் : தொழிற்சங்கத்தில் சேர்க்க வேண்டும்.

யமன் : ஒரு பாடசாலைக்கு இரு அதிபர்கள் இருக்க முடியுமா?

அதிகாரிகள் : சொல்ல முடியாதென்று சொல்ல முடியாது.

(நாளை தொடரும்)

# கிருஷ்ண பரமாத்மா அவதரித்த கிருஷ்ணஜெயந்தி திருநாள் இன்று

வருடந்தோறும் ஆவணிமாதத்து கிருஷ்ணபட்சத்து அட்டமித்திதி கிருஷ்ணஜயந்தி, கோகுலாஷ்டமி எனக் கண்ணபரமாத்மா அவதரித்த திருநாளாகக் கொண்டாடப்படும். கீதோபதேசத்தில் உலகம் முழுவதும் தூங்கும் போது ஞானிகள் விழித்துக்கொண்டிருப்பர் என்றபடி எங்கும் அந்தகார இருள் சூழ்ந்த ஆவணிமாதத்து கிருஷ்ண பட்ச அட்டமி நள்ளிரவிலே உலகின் அஞ்ஞான இருளகற்றி, மெய்ஞ்ஞான ஒளி பிறக்கக் கோகுலத்திலே தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய கண்ணன் அவதரித்தான்.

கோகுலத்திலே பிறந்து மாடு மேய்ப்பவனாகவும் குழல் ஊதிக் கூத்தாடுபவனாகவும் தீராத விளையாட்டுப் பிள்ளையாகவும் தெருவிலே தொல்லைகள் புரிபவனாகவும் உலக இயக்கத்தையே தன் செயலால் உணர வைப்பவனாக விளங்கித் தேரோட்டும் பார்த்த சாரதியாக, திரௌபதியின் மானங்காத்த ஆபத்பாந்தவனாக குசேலர் போன்றவர்களை ரட்சித்த ரட்சகனாக, பீஷ்மருக்கு முத்தியளித்த ஞானியாக உலக அஞ்ஞான இருள் போக்கிப் பேரொளி வீசவைத்த பெரும் பரமாத்மாவாக கண்ணபரமாத்மா விளங்குகின்றார்.

**கண்ணபிரானின் விஸ்வரூபம்**

சிறுகுழந்தையாக இருந்து பலலீலைகள் புரிந்த கண்ணபிரான் தாயாருக்கு அண்டசராசரம் முழுவதையும் தன் வாய்க்குள் காட்டியும் பிரம்மதேவருக்குத் தானே பசுவாகவும் கன்றாகவும் காட்சி கொடுத்தும் பாண்டவர்களுக்குத் தன் சுயரூபத்தையே காட்டியும் யாவற்றிற்கும் மேலாக பகவத்கீதையிலே அர்ச்சுனனுக்கு தானே எல்லாம் எனத் தனக்குள் அடங்கிய விஸ்வரூபத்தைக் காட்டிக் கீதோபதேசம் செய்வதும் உலகில் அஞ்ஞான இருளகன்று மெய்ஞ்ஞான ஒளிபரவ வழிகாட்டியவனே கண்ணபரமாத்மாவாகும்.

**அதர்மம் அழித்து தர்மம் நிலைநாட்டியவன்**

உலகில் அதர்மங்கள் அழியவும் தர்மங்கள் நிலைக்கவும் தீயவர்களிடமிருந்துநல்லவர்களைக்காக்கவும்கண்ணபிரான் தசாவதாரங்கள் எடுத்தார். இந்தத் தசாவதாரங்கள் இவ்வுலகையே ஆட்டிவைக்கும் நவநாயகர்களாகிய நவக்கிரகங்களின் பலங்கொண்டு விளங்குவதனாற் தசாவதாரங்கள் கொண்ட கண்ணபிரானை வழிபடுவதன்மூலம் நாம் அதர்மத்தினின்றும் தர்மம் நிலைத்திட நல்வாழ்வு காணலாம்.

**நீர்வை மணி**

தசாவதாரத்தில் இராமவதாரம் சூரியனாகவும் கிருஷ்ணாவதாரம் சந்திரனாகவும் நரசிம்மாவதாரம் செவ்வாயாகவும் கல்கி அவதாரம் புதனாகவும் வாமன அவதாரம் வியாழனாகவும் பரசுராமவதாரம் சுக்ரனாகவும் கூர்மவதாரம் சனீஸ்வரனாகவும் வராக அவதாரம் இராகுவாகவும் மச்சவதாரம் கேதுவாகவும் அமைந்து இவ்வுலகவாழ்வில் கண்ண பரமாத்மாவின் வழிபாட்டின் மூலம் மக்கள் நற்கதியடைய ஏதுவாகின்றதன்றோ.

# பக்தர்கள் மீதான தாக்குதலுக்கு கத்தோலிக்க திருச்சபை கண்டனம்

இலங்கையைச்சேர்ந்த பக்தர்கள் தமிழகத்தில் பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களுக்கு உள்ளாவது குறித்து இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொழும்புப்பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தமிழகக் கத்தோலிக்கத் திருச்சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல்களுக்கு முடிவுகாணும் வரை கத்தோலிக்கர்கள் தமிழகத்திற்குச் செல்லவேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைக்குவரும் வெளிநாட்டவர்களைச் சிறந்த முறையில் வரவேற்று இலங்கை மக்கள் அனுசரித்து வருகின்றனர். ஆனால் தமிழகத்தில் உள்ள சிறிய தரப்பினர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகவும் அநீதியானது எனவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார். பிரச்சினைகள் இருந்தால் அதனைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டும். அதனை விடுத்து அப்பாவிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)




பணிவு மனிதரிடமிருக்க வேண்டிய குணவியல்பாகும். உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதிய வள்ளுவர் பணிவு எப்போதும் சிறப்புத்தருமெனக்கூறியுள்ளார். வழிபாட்டு நிலையில் பணிவு அடிப்படையாக அமைந்திருக்கும். தனது ஆற்றலைவிடப் பேராற்றலைக்காணும் போது அதற்குப் பணிந்து வாழ்வதே மனித இயல்பாகவும் உள்ளது. அவ்வாறு பணிந்து வழிபடும் மரபே இறைவழிபாடாக நிலைபெற்றுவிட்டது. இறையுருவைக் காணும் போது பாதாதிகேசமாக நோக்க வேண்டும். பாதாதிகேசம் என்பது அடிமுதல் முடிவரை நோக்குதலாகும்.

மணிவாசகர் பாடலில் இறைவன் திருவடியை அடையவேண்டும் என்ற உணர்வே மேலோங்கியுள்ளது. அவர் பெற்ற திருவடித்தீட்சையனுபவமே இதற்குக் காரணமாகும். இறைவனுடைய திருவடியின் திருக்கோலம் அவர் முன்னர் ஒருபோதும் காணாத திவ்விய மரன கோலாகமாக இருந்தது. எனவே, அக்கோலத்தை அவரால் மறக்கவே முடியவில்லை. மீண்டும் அதைக்காண வேண்டும் என்ற பெருவிருப்போடு இருந்ததைப் பல பாடல்களில் பாடியுள்ளார். தொன்றுதொட்டு வழிபட்டு இறைவனுக்கு ஆட்பட்ட மெய்யன்பர்கள் [illegible] பெற்றதைத் இறைவன் திருவடியை அடைந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

நாம் செய்யும் பாதகமலம் அற வேண்டுமாயின் இறைவன் பாதகமலங்களைப் பற்றி வழிபடவேண்டும் என முன்னோர் கூறியுள்ளனர். எனவே இறைவனைத் தரிசனம் செய்யும் போது திருவடிகளிலே மானசீகமாகத் தலையை வைத்து வணங்கவேண்டும். கோவிற் படிகளிலே தலையைவைத்து வணங்கும் வழிபாட்டு நடைமுறையும் இதனாலே ஏற்பட்டுள்ளது. தன்னைப் பணிந்து வணங்குபவர்களின் பிணியை இறைவன் உடனடியாகத் தீர்த்து அருள்வான் என்பது எம்மவரிடையே அசையாத நம்பிக்கையாக இன்றும் நிலவுகிறது.

மணிவாசகர் தனக்கு இறைவன் அருள்செய்யாமைக்குரிய காரணத்தை ஆராய்ந்து பார்க்கிறார். திண்ணிய மூங்கிலைப் போன்ற தீமையுடைய தன்னை இறைவன் ஆட்கொள்ளவில்லை என்பதை நன்குணர்கிறார். எனவே தன்னுடைய பிராரத்த கன்ம வினையை இறைவன் ஞானத்தீயால் எரித்து விரைவாக வந்து முக்திதரவேண்டும் என இறைஞ்சிப் பாடுகிறார். தன்னிலையை விளக்க ஓர் உவமையைப் பயன்படுத்துகிறார். *திணியார் மூங்கில் அனையேன்* என்று கூறியுள்ளார். திண்மை பொருந்திய மூங்கில் என்றது குழாய் மூங்கில் அல்லாத கல்மூங்கிலாகும். மன நெகிழ்ச்சியற்ற தன் குணவியல்பை வெளிப்படுத்த இந்த மூங்கிலை எடுத்துக்காட்டியுள்ளார்.

தன்னுடைய வினையைப் பொடியாக்கி குளிர்மையான இறைவன் பாதத்தில் சேர்த்தருள வேண்டுமென இறைஞ்சிப் பாடுகிறார். இறைவன் குணவியல்பை *பொய்தீர் மெய்யனே* என்ற தொடரால் சிறப்பாகவும் விளக்கியுள்ளார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவன் உயிர்களின் பொய்ம்மையை நீக்கியருளும் மெய்ப்பொருளானவன். எனவே உறுதியாகத் தன்னுடைய வினையையும் அழித்தருள்வான் என நம்புகிறார். முன்னர் இறைவன் அவரை ஆட்கொண்டபோது சஞ்சித வினையும் ஆகாமிய வினையும் அழிக்கப்பட்டன. எனவே எஞ்சியுள்ள் பிராரத்த வினையை அழிக்கவே வேண்டுதல் செய்கிறார். அவருடைய வழிபாட்டு நிலை எல்லோருக்குமே உரியது.

*பணிவார் பிணிதீர்த்தருளிப்*
*பழைய வடியார்க்குன்*
*அணியார் பாதங் கொடுத்தி*
*அதுவும் அரிதென்றால்*
*திணியார் மூங்கில் அனையேன்*
*வினையைப் பொடியாக்கித்*
*தணியார் பாதம் வந்தொல்லை*
*தராய் பொய்தீர் மெய்யனே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர் வளர்மதி வி.க. கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று





(வேலணை)

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கரப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இன்று இரவு 6.30 மணிக்கு புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் தலைமையில் நடைபெறும் இவ்விறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி ஆலோசகர் தேசமானிய இராமச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் மற்றும் கோப்பாய் பிரதேச செயலக செயலாளர் பிரதீபனும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி இந்து இளைஞர் அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதவுள்ளன. இந்து இளைஞர் அணி யாழ். மாவட்டத்தில் நடைபெறும் கரப்பந்தாட்ட தொடர்களில் தொடர்ந்து சம்பியன் பட்டங்களை பெற்று வருவதால் இந்து இளைஞர் அணியின் சம்பியன் வேட்டை தொடருமா அல்லது இந்து இளைஞர் அணியின் சம்பியன் வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.




## அரச அதிபர் வெற்றிக்கிண்ணை உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

அரச அதிபர்·வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பங்குபற்றி வந்த உதைபந்தாட்ட முதலாவது போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகத்தை எதிர்த்து வேலணை பிரதேச செயலகமும் மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை அணியினர் மோதவுள்ளனர். (3-24)

## அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக வடமாகாண ரீதியான கிரிக்கெட் போட்டி

(வேலணை)

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் மிகப் பிரமாண்டமாக நடத்தும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர் வரும் 8,9,15,16,22 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மகா ஜனாக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

40 கழகங்களுக்கு மேல் பங்குபெறும் இத்தொடரில் 40 கழகங்களும் ABCD என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. AB குழுக்களுக்கான போட்டிகள் 8,9 ஆம் திகதிகளிலும்CDகுழுக்களுக்கான போட்டிகள் 15,16 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது. இத்தொடரில் பங்குகொள்ளும் அணிகள் குறித்த நேரத்தில் போட்டிகளுக்கு வருகை தந்து போட்டிகளை குறிப்பிட்ட காலத்தில் நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கலந்துரையாடல்

(வேலணை)

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 21 வயதுப் பிரிவிற்கான உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்துக் கழகங்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கானை பிரதேச செயலக பதில் விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

# சிவகுருநாதர் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி; யாழ்.இந்துக் கல்லூரி, கொழும்பு ஆனந்தா கல்லூரி

## இன்று பலப் பரீட்சை

(வேலணை)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கும் இடையில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் இரு நாட்களைக் கொண்ட மாபெரும் துடுப்பாட்டப் போட்டி கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆனந்தாக் கல்லூரியின் புகழ்பெற்ற ஆசிரியரும் பகுதித் தலைவருமான சிவகுருநாதனின் ஞாபகார்த்தமாக இத்துடுப்பாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி 1886 ஆம் ஆண்டு சிங்கள கலாசாரத்தையும் பௌத்த நாகரிகத்தையும் வளர்ப்பதற்காக கொலனஸ் ஹென்றி ஸ்ரீல் ஒல்கோட் என்பவரால் ஆண்கள் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டது.

இப்போது ஒரு தேசியக் கல்லூரியாக வளர்ந்து நிற்கின்றது. இலங்கை தேசிய துடுப்பாட்ட அணியில் விளையாடி இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை 1996 ஆம் ஆண்டு பெற்றுக் கொடுத்த இலங்கைஅணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க மற்றும் முன்னாள் தலைவர் மாவன் அத்தபத்து, திலான் சமரவீர ஆகியோர் இக்கல்லூரியில் கல்வி கற்றவர்கள் ஆவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 1890 ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சிந்தனையில் தமிழ் கலாசாரத்தையும் சைவ சமயத்தையும் வளர்க்கும் நோக்குடன் சட்டத்தரணி நாகலிங்கத்தினாலும் பசுபதி செட்டியாரினாலும் ஆண்கள் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது தேசிய பாடசாலையாக வளர்ந்து நிற்கின்றது. இக்கல்லூரியின் துடுப்பாட்ட அணியினர் பல வருடங்களாக இலங்கை துடுப்பாட்ட சபை நடத்தும் போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி வருகின்றனர். இத்துடுப்பாட்ட போட்டியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கொழும்புக் கிளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்துகின்றன. இத்துடுப்பாட்ட போட்டிக்கு கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் டு.ஆனு.தர்மசேனாவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவும் தலைமை தாங்கவுள்ளனர். இனிவரும் காலங்களில் இத்துடுப்பாட்ட போட்டி வருடாவருடம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான துடுப்பாட்ட போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்கள் பிரகாசிக்கும் பட்சத்தில தேசிய துடுப்பாட்ட அணி யில் சேர்ந்துக் கொள்வதற்கான வாய்ப் பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின் றது. இத்துடுப்பாட்ட போட்டிகளின் மூலம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் மேலோங்கச் செய்ய முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். மிகப் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இத்துடுப்பாட்டப் போட்டியின் தொடக்கவிழாவுக்கு அர்ஜுன ரணதுங்க, மஹேல ஜெயவர்த்தன மற்றும் மேலும் சில இலங்கை அணிவீரர்களும் கலந்து கொள்ள இருக்கின்றனர் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யு.எஸ்.,ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிய பெலாரசின் அசரன்கா.

# சட்டவிரோத ஆஸி...

பிணை வழங்கப்பட்டவர்களின் கடவுச் சீட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கு மாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை இவர்களை சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல உதவியதாக கூறப்படும் 7 பேரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பிணையில் விடுக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்குக் கிழக்கு பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகுகள் மூலம் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்த 69 பேரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐரோப்பாவுக்கு சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச்சென்றதாக கூறப்படும் மீன்பிடி படகொன்று துருக்கியின் மேற்குப் பகுதியில் நேற்று கவிழ்ந்ததால் 58 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக துருக்கியின் அன்டோலியா செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

43 பேரின் சடலங்கள் கடலில் இருந்தும் 15 பேரின் சடலங்கள் படகிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளதாக துருக்கியின் இஸ்மீர் மாகாணத்தின் ஆளுநர் தெரிவித்ததாக அச்செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது. (ந-11)

# இலங்கைக்கு அழுத்த...

நிறுத்தி யுத்த வலய மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு கோரத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சரவை கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் முகர்ஜி தெரிவித்தார் எனவும் மேனன் குறிப்பிட்டார்.

புதிய செய்திகளின்றி இந்தியாவுக்கு விஜயம் செய்வதில் பயனில்லை என ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவுக்கு இந்தியா அறிவித்தது எனவும், வடக்கு இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றல் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில் இலங்கை அவசர ஆர்வம் காட்டுவதாக இந்தியாவிற்கு தோன்றவில்லை என மேனன் குறிப்பிட்டார்.

சர்வதேச சமூகம் உன்னிப்பாக கண்காணித்தால் மட்டுமே இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பணிகளில் ஆர்வம் காட்டும் என புதுடில்லிக்கான அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு விவகாரப் பொறுப்பாளர் பீட்டர் போர்லீஹ் அமெரிக்கத் ராஜாங்கத் திணைக்களத்திற்கு தகவல் அனுப்பி வைத்துள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. (ந-2)


# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 08 1934




மறைவு 07 09 2010

திருமதி வேலாயுதம் அன்னம்மா

ஈரவிழிகளுடன் ஈராண்டு சென்றதம்மா
எங்கு பார்த்தாலும் உங்கள் முகம்தான் பரிவோடு தெரிகிறதம்மா.
பாசத்தைக் காட்டி பந்தத்தை புரியவைத்த அம்மா
ஆனந்த இல்லமொன்றை அன்பாக கட்டிக்காத்தீர் அம்மா!
இப்போ ஆனந்தமிழந்து இருளானதம்மா!
அம்மா நீங்கள் வருவீர்கள் என்ற ஏக்கத்தில்
வாசலை கண்கள் தேடும் எமையறியாமலே
ஆயிரம் கதைகள் சொல்ல ஆசையம்மா!
உங்கள் பாதச்சுவடுகள் பட்ட இடமெல்லாம்
கோயிலாக நினைப்போம் அம்மா!
அம்மா சாகப்போகும் வேளையும் எம்மைப்பார்த்த
அந்த அன்புப்பார்வை எம்மை தினம்தினம்
கண்ணீரில் நனைய வைக்குதம்மா
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
உங்கள் பாசக்கடன் தீர்ப்போமா அம்மா
அம்மா அம்மா என்றழைக்க ஆசையாய் இருக்கிறதம்மா
மனம் வருந்தும் வேளையெல்லாம்
உங்கள் கல்லறைதான் எங்கள் கோயிலம்மா...!

உரும்பிராய் வடக்கு (368) -குடும்பத்தினர்-


# சங்கக்காரவுக்கு மூன்று விருது



இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான சியட் ஸ்ரீலங்கா விருது வழங்கல் விழா-2012 நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இவ் விழாவில் இலங்கை வீரர் குமார் சங்கக்கார வருடத்தின் சிறந்த வீரர், வருடத்தின் மக்கள் அபிமானம் பெற்ற வீரர், வருடத்தின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் ஆகிய மூன்று விருதுகளை வென்றார்.

சியட் ஸ்ரீலங்கா விருது வழங்கல் விழா நான்காவது தடவையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. மக்கள் அபிமான வீரர் விருதை தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக குமார் சங்கக்கார வென்றுள்ளார்.

மக்கள் அபிமானம் பெற்ற வீரர் விருதையும் வருடத்தின் சிறந்த சியட் கிரிக்கெட் வீரர் விருதையும் ஒரே வருடத்தில் அவர் வென்றமை இது இரண்டாவது தடவையாகும்.

சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாருக்கான விருது ரங்கன ஹேரத்துக்கு வழங்கப்பட்டது. ஒருநாள் சர்வதேச போட்டிகளின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது மஹேல ஜெயவர்த்தனவுக்கும் ஒருநாள் சர்வதேச போட்டிகளின் சிறந்த பந்துவீச்சாளர் விருது லஷித் மலிங்கவுக்கும் வழங்கப்பட்டது.

ஒருநாள் சர்வதேச போட்டிகளின் சிறந்த சகலதுறை வீரருக்கான விருது திலகரட்ண டில்சானுக்கு வழங்கப்பட்டது. சிறந்த வளர்ந்து வரும் வீரருக்கான விருது தினேஷ் சந்திமாலுக்கு வழங்கப்பட்டது.

# உதைபந்தாட்ட தெரிவு

(கரவெட்டி)

தேசிய உதைபந்தாட்ட அணியில் தெரிவு செய்யப்படுவதற்கு 21 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள போட்டி அட்டவணை தயாரிப்பு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டு கழகங்களின் தலைவர், செயலாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எல்.அனுராகாந்தன் தெரிவித்துள்ளார். (3-24)

# கோப்பாய் பகுதி...

கூட்டத்தின்போது படைத் தரப்பினர் கோரியுள்ள அரச காணிகள் தொடர்பில் அனுமதி கோரி கூட்டத்தில் அறிக்கை யொன்றினை பிரதேச செயலர் சமர்ப்பித்தார்.

இதில் ஜே/261 கிராம சேவையாளர் பிரிவில் சிறைச்சாலைக்கு என ஒதுக்கப்பட்ட அரச காணியை ப்ாதுகாப்பு படைப் பிரிவின் 51 ஆவது படைத் தலைமையகம் அமைப் பதற்காக வழங்குதல். சுமார் 8.428 ஹெக்டெயர்.

ஜே/269 நீர்வேலி, பன்னாலைப் பகுதியில் உள்ள அரச காணியை பாதுகாப்பு படையினர் கோரியுள்ளனர். சுமார் 0.920 ஹெக்டெயர்.

ஜே/287 தம்பாலை கதிரிப்பாய் பகுதியில் 4.540 ஹெக்டெயர் காணியை பாதுகாப்பு படையினரின் தேவைக்கு வழங்குவதற்காக நில அளவை செய்யப்பட்டுள்ளது.

ஜே/268 நீர்வேலி பனை அபிவிருத்தி சபைக்கு சொந்தமானதாகவுள்ள அரச காணியை பாதுகாப்பு படையினர் கோரியுள்ளனர்.

இது சுமார் 2 பரப்பு காணி என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்புப் படைத் தரப்பினர் கோரியுள்ள அரச காணிகளை அவர்களிடம் வழங்கப்போகிறீர்களா எனக் கேட்டபோது அப்பகுதி மக்களின் விருப்பத்தைக் கேட்டறிந்த பின்பே தீர்மானிக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அலென்ரின் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

# இவர்களை நாங்கள்...

போராளிகள் தடுப்பு முகாம்களில் இருந்து சமூகத்துடன் இணைக்கப்பட்ட போதும் அவர்களைச் சமூகம் ஒதுக்கி வைக்கின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

இதில் சமூகத்தில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கு அவர்களை தலைமைப்படுத்த விரும்புவதில்லை எனவும் மற்றும் பொது நிகழ்வுகளுக்கு அவர்களை அழைக்க விரும்புவதில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

முன்னாள் போராளிகளுக்கு திருமணம் நிச்சயிக்கப்படும்போதும் அதிகளவானபேர் அவர்களை மணமகனாகவோ அல்லது மணமகளாகவோ் ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை எனவும் அவர்களது உறவினர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

ஏதோவொரு இக்கட்டான நிலையில் போராளிகளாக இணைக்கப்பட்ட அதிகளவான இளைஞர் யுவதிகள் இன்று புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்டபோதும் அவர்களை சமூகம் ஏற்றுக் கொள்ளாதது அப்போராளிகளுக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. (ந-3-24)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி இப்பொழுது தென்மராட்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (மாணவர் அபிவிருத்தி) பதவி உயர்த்தப்பட்ட திரு.அ.அகிலதாஸ் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பாடசாலை அபிவிருத்திக் குழு
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(சி 077)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தால் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணிதம், ஆங்கிலம், சமூக விஞ்ஞானம், சங்கீதம், நடனம், வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கே ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## புதிய அமெரிக்க...

அவதானம் செலுத்தவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தாம் மக்களின் சக்தி குறித்து நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் இவரது கொழும்பு வருகை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## வீதி விபத்தில்...

நாயன்மார்கட்டு பாரதி வீதியைச் சேர்ந்த மாணிக்கம் தம்பிராசா (வயது 75) என்ற முதியவரே பலியாகியுள்ளார்.

மோதிய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் விபத்தின்போது தப்பிச் சென்றுள்ளார்.

எனினும் பின்னர் மாலை 5 மணியளவில் கோப்பாய் பொலிஸாரிடம் அவர் சரணடைந்துள்ளார். (ந-134)

## ஜப்பான் யுத்தக்...

தெரிவிக்கப்படுகிறது.

141 அடி நீளமும் 61 அடி அகலமுமான இந்தக் கப்பல்களில் 160 அதிகாரிகள் உட்பட 220 பேர் அடங்கியுள்ளனர்.

இலங்க்கக்கான ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி இலங்கை வந்து திரும்பிய சில நாட்களில் இந்த இரு யுத்தக் கப்பல்களும் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## வேட்பாளர் வீட...

இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணை களை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ந-5)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக 1008 தேங்காய் உடைக்கும் கூட்டமைப்பு

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டியும் காணாமல் போனவர்களை பாதுகாப்பாக மீட்டுத்தர வேண்டியும் 1008 தேங்காய் உடைத்து காளியிடம் சிறப்புப் பிரார்த்தனை செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிபு செய்துள்ளது.

சர்வதேச கைதிகள் தினமான செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் காணாமல்போனவர்கள் வீடு திரும்புவதற்கும் வவுனியா குருமன்காட்டில் உள்ள காளி கோவிலில் காலை 10 மணிக்கு 1008 சிதறு தேங்காய் உடைத்துச் சிறப்புப் பிரார்த்தனை செய்யப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிபுற்று மூன்று ஆண்டுகள் ஆகியும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது எமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. எனினும் அவர்களின் விடுதலை தொடர்பாக நாம் மேற்கொண்ட பல முயற்சிகளும் பலனற்றுப் போயுள்ளன.

இதுமட்டுமன்றி சிறைக்கூடங்கள்கூட தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பாதுகாப்பான இடமாகத் தோன்றவில்லை. அதற்கு சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் நிமலரூபன், தில்ரூக்சன் ஆகியோர் மரணமடைந்தனர். சதீஸ்குமார் நினைவிழந்த நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

தமிழ் அரசியல் கைதிகளின் உயிரையும் உரிமைகளையும் காப்பாற்ற வேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகள், மனித உரிமைகளில் ஆர்வம் உள்ளோர் ஆகிய அனைவரதும் கடமையாகும். சிறைகளிலும் வதை முகாம்களிலும் மற்றும் பிற இடங்களிலும் வாடுகின்ற அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், சர்வதேச கைதிகள் தினத்தன்று இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி உள்ளிட்ட தென்னிலங்கை ஜனநாயக முற்போக்குச் சக்திகளும் கலந்து கொள்ள உள்ளனர்.

இவர்களுடன் சிறைக் கூடங்கள், தடுப்பு முகாம்கள் மற்றும் பிற இடங்களில் உள்ளவர்களின் உறவினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். அவர்களுடன் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ந-11)


After O/L or A/L புதிய பிரிவுகள், (Per Course 2000 Rs Discount + 9 Free)
கணினி கம்பஸ் கல்வியங்காட்டில்
ஒரு கற்கைநெறியை கற்பவர்களுக்கு 9 Diploma Course fee Free
ஆரம்பத்தில் இருந்து கற்கலாம் பூரண அறிவிற்கான உத்தரவாதம்.
Ms office, Hardware, Networking DTP, Accounting, Multimedia, Web Design, English, Singalam
Engineering-USA MCSE, MCP, MCTS, MCITP USA Authorized Training Partner & Testing Centre in JAFFNA
கணனிப் பொறியியலாளர் கற்கைநெறி. Microsoft-USA வழங்கும் சான்றிதழ், வருமானம் கூடிய வேலை வாய்ப்புக்கள் இலங்கை அரசாங்கம் ICTA ஊடாக வழங்கும் 60$ Scholorship MTA Exam Fee 5$
மேலதிக விபரங்களுக்கு MCAI CAMPUS Supported by Jaffna Computer Society
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243, Adiyapatham Road
Qualified Lectures panel, 12 Years Experience Facebook : MCAI CAMPUS


# பல்கலைக்கழக பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்குவோம்

## ஹெகலிய நம்பிக்கை

பல்கலைக்கழக பேராசிரியர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் பிணக்குகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்படும்.

நிதி அமைச்சின் செயலாளருடன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

மொத்த தேசிய உற்பத்தியின் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்குமாறு விடுக்கும் கோரிக்கை நடைமுறைச் சாத்தியமற்றது.

உலகின் அநேக நாடுகள் இவ்வாறு கல்விக்காக ஒதுக்கீடு செய்வதில்லை என ஹெகலிய ரம்புக் வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ந-)


வட மாகாண பாடகர்களை ஒன்றிணைக்கும்
திருபா லேணர்ஸின்
இசைத்தேர்வு மிக விரைவில் ...
முதல் மூன்று இடங்களைப்பெறும் வெற்றியாளர்களுக்கு தென்னிந்திய பின்னணிப் பாடகர்களுடன் இசைத் தொகுப்பில் பாடுவதற்கான அரிய சந்தர்ப்பம்.
தொடர்புகளுக்கு : 0772702400, 0771882837
(சி-951)



BIT Project மற்றும் Semester வகுப்புக்கள்
- 2007 ல் இருந்து Supervisor (30 Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில்
BIT
By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS)
இல: 28/23, மணல்தரை வீதி, கந்தர்மடம்.
T.P:0779785796 (4.30 p.m - 8.30 p.m)
(367)



Sep 8 ஆம் திகதி யாழ் மாநகரில் BCAS CAMPUS
BCAS வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு
Seminar & Counseling 2012
➢ நவீன சர்வதேச தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள்
➢ சர்வதேச உயர்கல்வித் தகைமைகளைப் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகள்
➢ உயர்கல்விக்கான புலமைப்பரிசில் வாய்ப்புகள்
➢ மிக குறைந்த செலவில் குறுங்கால தொழிற்பயிற்சி மூலமான உயர்தொழில் வாய்ப்புகள்
➢ குறைந்த தகைமையுடன் பொறியியல் மற்றும் தொழிநுட்ப பட்டப்படிப்புக்களுக்கான இலகு வழிமுறைகள்
➢ UK. Australia, Canada, USA போன்ற நாடுகளுக்கான Student Visaக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளும் புதிய ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளும்.
பெறுமதிமிக்க ஊக்குவிப்பு பரிசுகளுடன்.........

திகதி 2012-09-08 (சனிக்கிழமை)
நேரம் காலை 10.00a.m - 02.00p.m
இடம் Gnanams Hotel 301, Clock Tower Rd (யாழ் போதனா வைத்தியசாலை பின்புறம்)
இது போன்ற பெறுமதிமிக்க ஆலோசனைகளோடு தனிப்பட்ட முறையில் மாணவர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்களால் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.
மேலதிக விபரங்களுக்கு 0777 444 225 0777 286 877
(சி-978)
British College of Applied Studies
• Colombo • Dehiwela • Kandy • Batticaloa • Doha - Qatar
அனுமதி முற்றிலும் இலவசம்
மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இவ்வறிவுரை பட்டறையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.
www.bcas.lk


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் தம்பிராசா



நாயன்மார்கட்டு பாரதி வீதியைச் சேர்ந்த மாணிக்கம் தம்பிராசா 06.09.2012 வியாழக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-லக்சுமி தம்பதியின் அன்பு மகனும், இராசபூபதியின் அன்புக் கணவரும், செல்வச்சந்திரன், பிரபாசங்கர், காலஞ்சென்ற சதீஸ்சந்திரன், வாசுகி, சுதாகர்(கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்), சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், உதமதாசன், வசந்தாதேவி, பகீரதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தன் (தேசிய கல்வியியற் கல்லூரி-யாழ்), கயந்தினி, துசாந்தினி, பகீரதன், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பசுபதி, சதாசிவம், வண்ணமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகலிங்கம், பூபதி, மங்களம், சிவஞானம், சிவலிங்கம், லீலாவதி, திலகவதி, சிவகுமார், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 07.09.2012 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பாரதி வீதி, நாயன்மார்கட்டு.

(371)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org